# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு மாசிமாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 6-ம் இலக்கம்

# செய்திகளில் பரிசுத்த தந்தை

(தொகுப்பு: சாமுவேல் பெனடிக்ற்)

**பாப்பரசரின் அன்பளிப்புகள்:**

1. சமீபத்திலே ஸ்பானியதேச றிபெடெல்கோமா வட்டத்தில் வெள்ளப்பெருக்கினுல்ஏற்பட்ட சேதத்திற்கான நிவாரணநிதியொன்றைப் பரிசுத்தபாப்பரசர் வழங்கியிருக்கின்றுர். பெருநஷ்டத்துக்கு ஆளாகியோருக்குத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்,

2. காலஞ்சென்ற பன்னிரண்டாம்பத்திநாத பாப்பானவர் உபயோகித்த தட்டச்சு எந்திரத்தை அருளப்பபாப்பரசர் மிலான்நகர அதிமேற்றிராணியாண்டகையான கருதினுல்ஜியோவான்னிமொன்தினிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவர் காலஞ்சென்றபாப்பரசருக்கு மிகநெருங்கிய ஆலோசகராகவிருந்தார். இந்தத்தட்டச்சு எந்திரத்தின் மூலமே காலஞ்சென்றபாப்பானவர் தமதுபுகழ்பெற்ற நிருபங்களையும், வேண்டுகோள்களையும் தயாரித்துவந்தார்.

3. பரிசுத்ததந்தை அருளப்பபாப்பரசர், தாம் பாப்புவாகத் தெரியப்பட்டபின் இதுவரை நிகழ்த்திய லத்தீன் சொற்பொழிவுகள்அனைத்தையும் தயாரிக்க உதவிய அதிவண. அந்தோனியோ பாகி அவர்களுக்குத் தங்கத்தாலான ஒரு கடிகாரத்தை அன்பளிப்புச்செய்திருக்கின்றுர்.

4. தமது முடிசூட்டு வைபவங்களின்போதும், லத்தறன் அருளப்பர் மகாதேவாலயத்திற்குத் தாம்விஜயஞ்செய்தபோதும் தம்மைச்சிவிகையில் சுமந்துசென்ற காவல்வீரர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத்தபாப்பரசர்பண முடிப்புகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

**பிரான்சியசிறைக்கைதிகளுக்காக வானெலியில் பேசுகிருர்:**

1. பிரான்ஸிலுள்ள மேலும் பிருல்என்ற மறியற்சாலையில் உள்ள கைதிகள் பரிசுத்ததந்தை தங்களுக்கென வானெலியில் சொற்பொழிவாற்ற வேண்டுமென மனுச்செய்திருந்தனர். இவர்களின் வேண்டுகோளை மகிழ்ச்சியுடன்ஏற்றுக்கொண்ட பாப்பரசர் சமீபத்தில் ஒருவிசேஷ வானெலிச்செய்தியை இக்கைதிகளுக்கென ஒலிபரப்பினுர்.

**யுத்தகாலத்தில் தாம்ஆற்றிய தொண்டுகளை நினைவுகூருகின்ருர்:**

சமீபத்திலே இத்தாலியில் கடமையாற்றும் பிரித்தானிய, தென்னுபிரிக்க, கனடிய, ஆஸ்திரேலிய, நியூசிலாந்த, இந்திய, பாகிஸ்தானிய, இலங்கைத் தூதுவர்களும், அவர்களின் காரியாலயங்களைச்சேர்ந்த உத்தியோகஸ்தரும் சேர்ந்த ஓர்குழு பரிசுத்தபாப்பரசரைச் சந்தித்தபோது அவர்களின்தரிசனம் தமக்கு முதலாவதுயுத்தத்தின்போது தாம் சேவையாற்றியமையை நினைவுக்குக்கொணர்ந்ததாகப் பரிசுத்ததந்தை கூறலாயினர். முதலாவது யுத்தகாலத்தில் தாம் ஓர்இராணுவகுருவாகக் கடமையாற்றிய போது நடத்திய பலசம்பவங்களையிட்டு அக்குழுவினருடன் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தாரெனச் செய்திகள்கூறுகின்றன.

**இயற்கைவர்ணச் சினிமாப் படத்தில் பரிசுத்ததந்தை தோன்றுகின்ருர்:**

வத்திக்கான்நகரில் இப்போது தயாரிக்கப்படும் எற்று பாத்ரெஸ்என்ற சினிமாப்படத்திற்கான சிலகாட்சிகளில் பரிசுத்த தந்தை தோற்றியிருக்கிருரெனச் செய்திகிடைத்துள்ளது. இச்சித்திரம் கத்தோலிக்கதிருச்சபையின் பலகோணங்களையும்விளக்கும் ஓர்பிரமாண்டமான தயாரிப்பாகும். பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் இச்சினிமாப் படத்திற்குத் தமதுமுழுஅனுமதியையும் அளித்ததுடன் தம்மையும் இதுசம்பந்தமாகப் படம்பிடிக்க அனுமதித்திருந்தார். சென்றவருடத்தில் 7இயற்கைவர்ணக்காட்சிகளைப் படம்பிடிக்கும் காமிராக்களுடன் அர்ச். இராயப்பர்மகாலயத்தில் பாஸ்குத்திருச்சடங்குகளைப் படம்பிடித்தபின் இக்கருவிகள் பாப்புமாரின் கோடைகால வாசஸ்தலமான காஸ்தல்காந்தல்போமாளிகைக்குக் கொண்டுபோகப்பட்டன. ஆயின் எதிர்பாராதவண்ணம் 12-ம்பத்திநாதபாப்பானவர் இயற்கையெய்தினுர். அதிர்ஷ்டவசமாக அக்காட்சிகளையும் படம்பிடிக்கும்சந்தர்ப்பத்தைத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்திக்கொண்டனர்.

# பண்டமாற்றுக் காலம்

— M. J. M. —

இக்காலமக்களுக்குத் தபம்என்ருல் வேப்பெண்ணெய். தபசுகாலத்தை அனுசரிப்பதென்ருல் ஒருசோர்வு. தியாகம்என்றதும் தயக்கம். தியாகம் மகிழ்ச்சிதரவேண்டுமாகில் அம்மகிழ்ச்சியில் ஒருபங்கு பரித்தியாகத்தால்— எம்மையும், எமதுஇன்பசுகங்களையும் கைநெகிழ்வதால் ஆகவேண்டும். இப்பரித்தியாகத்துக்குப்பதில் இறைவனின் அமைதியைஅடைவோம். இந்தப்பண்டமாற்றுச் செய்யும்படியே தபசுகாலம் நினைவுறுத்துகிறது.

ஆன்மஅமைதிக்குவழி ஒழுக்க அப்பியாசம். அதைஎம்மவர் அறியார். ஒழுக்கஅப்பியாசத்தை நாம்விரும்புவதில்லை. ஏனெனில், அதில் ஏதோஒன்றைக் கைவிடவேண்டியிருக்கிறது. கைவிடுவதென்ருல் நஷ்டப்படுவது. ஏதோஒன்றைக் கைவிடும்படி யேசுபெருமான் கேட்கும்பொழுது நாம் நஷ்டப்படவேண்டுமென்றல்ல, மாற்றிக்கொள்ளும்படியே கேட்கிருர். ஒழுக்கப்பயிற்சியிலே சுயபட்சத்தால், சுகசுகிப்பால் வரும் துன்பத்திற்கும், ஆன்மஅவஸ்தைக்கும்பதில் மனநிம்மதிபெறுகிறோம்.

கண்ணைப்பறிக்கும் வெளிச்சத்தை வெறுப்பதுபோல் ஆன்மஅழிவுக்குரியதைக் கடவுள்பக்தன் வெறுக்கிருன். புறணி, கோள், குண்டணி, விண்வம்பளத்தல் போன்றவை அவன் நாவில் எழாமற் தடுக்கிருன். ஏனெனில், அயலானின் உள்ளத்திலிருக்கும் எண்ணங்களைக் கடவுள்மாத்திரமே அறிவார். மேலதிகமான அந்தச்சுருட்டையும், இரண்டாவதுபோத்தல்கள்ளையும் (ஏன் முதலாவதுபோத்தலையும்கூட) விட்டுவிடுகிருன் சரீரத்துக்கு அதிகமாய்க் கொடுப்பதால் ஆத்துமத்தை மறந்துவிடாதிருக்க. செய்வதெல்லாவற்றையும் கடவுளுக்காகச் செய்துமுடிக்க விரும்புகிருன், தனது நற்செய்கைகளுக்குப் பிரசாரந்தேடாதிருக்க. ஏனெனில், அவைகளில்உள்ள நன்மைக்கெல்லாம் கடவுளே காரணர் எனஅறிவான்.

சுயமறுப்பை அல்லது ஒறுத்தலை அதற்காகவே கைக்கொள்ளுதல் மடமைத்தனம். அதனுல் ஆகவேண்டிய பலன்எல்லாம் எம் கருத்தைப் பொறுத்தது. எல்லாம் இறைவன் அன்பிற்காக. ஒரு சந்நிகாக்கும் சந்நியாசிக்கும், பத்தியம்பிடிக்கும் நோயாளிக்கும் உள்ளவித்தியாசம் என்ன? உபவாசத்திற்கும், பத்தியத்திற்கும், துன்பத்திற்கும், பரித்தியாகத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன? இறைஅன்பு. இறைவனின் அன்பில்லாத்தியாகம் துன்பம், அவ்வன்பிற்காகஅனுபவிக்கும்துன்பம் தியாகமாகிறது.

தன்னலத்தை — இன்பசுகங்களைத் தியாகஞ்செய்தல்இன்றி இறைவனைச்சார முடிவதில்லை; எனவே, உண்மைமகிழ்வும் இல்லை. நீண்டவாழ்க்கை எப்போதும் உத்தமவாழ்க்கை அன்று. ஒழுக்கமுன்னேற்றம் இயந்திர இயக்கம் போன்றதன்று. ஞானவாழ்விற்குக் குறுக்குப்பாதைஇல்லை. துன்பப்படுவதும், தூய்மைஅடைவதும் தொடர்புடையன. ஏனெனில், பாபத்தையும், அதன் இன்பத்தையும் கைநெகிழ்தல் எளிதல்ல, அன்பு தியாகத்தால் வளர்ச்சியடையும். இவ்வன்பையே ஆண்டவர் விரும்புகின்ருர்.

ஐஸ்கிறீம் விற்பனைசெய்பவன் முன் கடைசியான ஐந்துசதம் வைத்திருக்கும் சிறுவனைப்போன்றவர்கள்நாம். ஐஸ்கிறீம்சுவைக்க

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

அர்ச். ஸ்நாபகஅருளப்பர் காலந்தொடக்கம் திருச்சபையின் முக்கியநிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் இச்சினிமாவில் பெருவாரியானசீன்கள் பிடிக்கப்பட்டன. இராயப்பரைஅழைத்தல், கானவூர்க்கலியாணம், மலைமேற்பிரசங்கம்முதலிய முக்கியநிகழ்ச்சிகளையும் பின்னர் வேதகலாபனைகாலங்களின்முக்கியசம்பவங்கள், பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிட்டபட்டம் அளிப்புவைபவம், பன்னிரண்டாம்பத்திநாத பாப்பானவரின் மரணம்முதலிய முக்கியசம்பவங்களையும் இது அடக்கியுள்ளது.

பலபிரமாண்டமான படங்களைத்தயாரித்த பிலிப்பி அகஸ்ரனிஎன்பவரே இப்படத்தைத் தயாரித்துவருகின்றுர். பிரபல பிரான்சியகத்தோலிக்க கல்விவிற்பன்னரான திரு. டானியேல் றேரப்ஸ் இப்படத்தின் விவரணங்களை மேற்பார்வைசெய்துவருகின்றுர்.

## மட்டக்களப்பு
## தாண்டவன்வெளித் தபால்

**சுத்திகரத் திருநாள் :**

பாரம்பரியம்பெற்ற பழம்பதி. ஆம், மூன்று நூற்றாண்டுகளைக் கண்டுகழித்த பெருமைபெற்றது இப்பதி. ஆசா. யோசேவாஸ்முனீந்திரனின் அடிச்சுவடுகளைப்பின்பற்றி நடைபெற்றுவருவது சுத்திகரத்திருநாள். இத்திருநாளுக்குப் புளியந்தீவு, புளியடிக்குடாப் பங்குகளிலிருந்தும் கிறீஸ்துவர்கள் சமுகமளித்துவருவது பழமையானவழமை. இவ்வழமையைப்பின்பற்றிப் புத்தாண்டின் மாசித்திங்கள் 2-ம்நாளன்று மணிகளின் ஆர்ப்பரிப்போடு பங்குக்கிறீஸ்துவர்களும், மற்றையோரும் ஞானபரிமளிப்பாக மெழுகுவர்த்திகளுடன் ஆலயத்தில்குழுமினர். நமது கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் பூசைப்பரிசாரகர் புடைசூழப் பலிபீடத்தை அடைந்து மெழுகுவர்த்திகளை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கினை உரியமுறைப்படிநிறைவேற்றினர். மெழுகுவர்த்திகளைக் கைகளிலேந்திய பக்தர்கள் சுவாமிகள்தலைமையில் ஆலயவீதிவழியே வலம்வந்தனர். சுற்றுப்பிரகாரம் மீளவும்ஆலயத்தை அடைந்ததும் பாடற்பூசை நிறைவேறியது. பெருந்திரளானோர் திருவிருந்தருந்தித் திருநாளைச் சிறப்பித்தனர்.

**நூற்றாண்டு விழா ஞாபகார்த்த சின்னம் :**

திவ்வியபூசை முடிந்ததும் லூர்து தாயின் அழகியதிருச்சுரூபம் ஆடம்பரமாக ஆசீர்வதிக்கப்பட்டது. அதன்பின் மரியாயின்சேனை அங்கத்தினருள் நான்குபெண்மணிகள் திருச்சுரூபத்தைத்தாங்கி ஆலயவீதிவழியே "வாழ்க, வாழ்க, வாழ்கமரியே" என்னும் பாடலுடன் சுற்றுப்பிரகாரமாக வந்தனர். குருமனையின்முன் நவமாய் அமைக்கப்பெற்றிருந்த சிறியதோர் லூர்துகெபியை (மசபியேல்குகை) அடைந்ததும் அங்கே நமதுகட்டளைக்குரவர் கெபியைஆசீர்வதித்தனர். பின்னர் லூர்துதாயின் திருச்சுரூப ஆசீர்வாதமும் அளித்து லூர்துஅன்னையை நிரந்தரமாகக் காட்சிதருமாறு ஸ்தாபித்தனர். அதன்மேல் இந்தக்கெபி லூர்துஅன்னை அர்ச். பெர்னதேத்அம்மாளுக்குக் காட்சியளித்ததின் ஞாபகார்த்தமாய் நமதுபங்கிலே சுத்திகரத் திருநாளில் நூற்றாண்டுவிழாச்சின்னமாய் அமைந்திருப்பதையும், மாதா மக்களிடம்கேட்டுக்கொண்ட செபம் (செபமாலை), தபம்இவற்றை இடையறாதுசெய்து அன்னைக்குரிய அருமைமைந்தராக வேண்டுமென்பதையும் விளக்கி ஓர்சிறந்தசொற்பொழிவைக் கற்பொழிவோவென நிகழ்த்தினர் எமதுகட்டளைக்குரவர். பின்னர் துத்தியம், துத்தியம்என்னும் லூர்துதாயின் பாடலுடன் யாவும்இனிதேயாயிற்று. நமதுபங்கில் ஓர் லூர்துகெபி இல்லாத குறையை நிறைவாக்கிவைத்த எமகட்டளைக்குரவர்க்கு இப்பங்கினர் சார்பில் நன்றிதெரிவிக்கின்றோம்.

**அகில இலங்கைப் பால்வாரம் :**

எங்கள் கிளென்னி ஆண், பெண்பாடசாலையினர் சேர்ந்து முகாமைகாரர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் தலைமையில் சென்ற 3-2-59 செவ்வாய்க்கிழமை இவ்வாரத்தைக் கொண்டாடினர். அன்றுகாலை பால்வாரம்பற்றிய படங்கள், அட்டைகள், பால்தகரங்கள், பால்பெட்டிகளுடனும், ஆடல்பாடல், சுலோகங்களுடனும் ஊர்வலம்வந்தனர். பின்னர் ஆண்பாடசாலைமுன்றிலில் முகாமைக்கார சுவாமிகளும், ஆண், பெண்பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களும், இருஉதவி ஆசிரியர்களும் பால்வாரம்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பகல் 11மணியளவில் ஆசிரியர்களும், மாணவர்மாணவிகளும் இலவசபாலை இதமாய்ப்பருகினர். பிற்பகல் பிரதமவகுப்புகளுக்கிடையே வியாசப்போட்டி நடாத்தப்பெற்றுப் பரிசில்கள் பெற்றோர்க்கு ஆண், பெண் இருபாடசாலைகளுக்கு இரு முதற்பரிசில்கள் முகாமைக்கார சுவாமிகளாலும், இரண்டாவது பரிசில்கள் அவ்வப்பாடசாலை ஆசிரியர்களாலும் வழங்கப்பெற்றதோடு வைபவம் முடிவுக்கு வந்தது.

# பச்சாத்தாபக் கள்வன்

சுவிற்சர்லாந்துதேச பிரதம நீதியரசர் அத்தேசபேல்நகரிலிருந்த கத்தோலிக்கக்குருமாருள் ஒருவரைஅழைத்து, வழிப்பறிகள்வனாக் காலங்கழித்துவந்து ஈற்றில்அகப்பட்டுக் கொலைத்தண்டனைத் தீர்ப்புப்பெற்ற கத்தோலிக்கன் ஒருவன் விரைவில் தூக்கிலிடப்படவிருக்கிறானென்றும், மரணத்தின்முன்னாவது அவன்மனந்திரும்பித் தனது அக்கிரமங்களுக்காக மனஸ்தாபப்பட்டுப் பாவமன்னிப்பு அடையச்செய்ய வேண்டுமென்றும் அக்குருவானவரைக் கேட்டுக்கொண்டார். குருவானவரும் அதற்குஉடன்படவே, இருவரையும் ஒருஅறையில்விட்டுப் பூட்டிவிட்டு, இன்னும் இரண்டுமணித்தியாலம் இருக்கிறதென்றும், அதற்குள் அவனை ஆயத்தஞ்செய்து அவனுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுக்கவேண்டுமென்றும் கூறிவிட்டு அதிகாரிகள் சென்றார்கள். தங்கள் இருவரையும்மாத்திரம் தனியவிட்டுப்போவதை அவதானித்த குருவானவர் நீதியரசரைநோக்கி, "நான் இந்த மறியற்காரனுக்கு ஆன்மசம்பந்தமான நன்மைகளைச் செய்யவந்தேனேயல்லாது இவனுக்கு நான்காவலாளியல்ல; இவனைக் காவல்செய்வதற்குத் தகுந்தஓர்ஆளை விட்டுச்செல்லும்படி தங்களிடம் பரிவாகக்கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்றார். "அதைப்பற்றி நீர் கவலைகொள்ள வேண்டியதில்லை; அறைக்கதவு நன்றாகப் பூட்டப்பட்டிருக்கும்; உங்களைப்போல ஐம்பது பேர்சேர்ந்தாலும் அதனைஉடைக்கமுடியாது" என்றுசொல்லிவிட்டு நீதியரசர் சென்றார்.

நீதியரசரும், அவரோடுவந்த மற்றும்அதிகாரிகளும் வெளியேசென்றபின் குருவானவர் சிறையாளனுக்குப் பெரிதும் மனஉருக்கமான பலவிதநன்மதிகள் கூறினார். என்னவிதமான புத்திமதிகளைக் கூறியபோதிலும் கொலைபாதகன் அவதானமற்றவனாய் அங்கும்இங்கும்பார்த்து மிகுந்தஅங்கலாய்ப்புடையவனாகக் காணப்பட்டான். மரணவேளை நெருங்கியபோதிலும் அவன் மனஸ்தாபப்படாது சாகப்போகின்றானே; பாவமன்னிப்பு அடையாமல் மரித்து நரகபாதாளத்தில் விழப்போகின்றானே என்பதை உணர்ந்து அவனில் இரக்கங்கொண்ட குருவானவர் "தம்பி, நீ சீக்கிரம் தூக்குமரத்தில் இடப்படுவாய்; உனது மரணவேளை அணமிவிட்டது; வீண்கவலைகளைவிடுத்து உன்பாவங்களுக்காக மனஸ்தாபப்படு; நான்சொல்லுகிறவைகளுக்குச் செவிகொடு" என்று பெரிதும் அனுதாபத்துடன் கூறினார்.

"சுவாமி, தாங்கள்சொல்லுவது சரிதான்; எனக்கு இப்படிப்பட்டதீர்வை நீதியான தீர்வைதான்; நான் படுபாதகங்கள்புரிந்த பாரியகுற்றவாளி; எனக்கிடப்படும் மரணதண்டனையை நான் தேவசித்தத்துக்குப்பணிந்தமனதுடன் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதும் சரியே; ஆனால், தங்களுக்குப் பிரியமானால் தாங்கள்என்னை மரணதண்டனையிலிருந்து பாதுகாக்கக்கூடும்; இப்படியிருக்க எனக்குத் துணைபுரியாது மரணத்துக்கு என்னைஆயத்தஞ்செய்வதில் தாங்கள் ஆத்திரப்படுவதைக்கண்டு நான்எப்படிப் பார்க்கில்லாது இருக்கலாம்" என்றான் சிறையாளன்.

"உன்னைப் பாதுகாப்பதா? தப்பியோட உனக்குத் துணைபுரிவதா? எப்படி அது என்னால்இயலும்? அப்படிச் செய்யஎண்ணுவது மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டவாறாகுமே; அன்றியும்உன்னைஉள்ளபடி தப்பியோடச்செய்ய என்னால்கூடுமானாலும் அப்படிச்செய்வது தகுமா? நீசுயாதீனமாக நடந்தால் முன்போலவே வழிப்பறிகள்வனாய்ப் படுபாதகங்களைப் புரிந்துதிரிவாயே."

"ஐயோசுவாமி! இதனால்தான் தாங்கள்எனக்குத் துணைசெய்வதற்குப் பின்வாங்குகிறீர்களா? நான் முற்றாக மனந்திரும்பிவிட்டேன்; ஒருபோதும் எனது வெட்கத்துக்குரிய பழையபாதகமான சீவியத்தைநடாத்தக் கனவிலும் நினையேன்; அதற்குமாறாக எனதுஅக்கிரமங்களுக்காக என்னால்இயன்றமட்டும் பரிகாரஞ்செய்து உத்தரிக்கப் பிரயாசப்பட்டுவருவேன்"

இவ்விதபேச்சைக்கேட்டுச் சிறையாளனிலே மனமிரங்கிய குருவானவர் அவனுடன் இன்னுஞ்சிறிதுவேளை வார்த்தையாடியபின் அவன்உள்ளபடியே மனஸ்தாபப்படுகிறானென நம்பிக்கொண்டார், அவனுக்குத் துணைபுரிய மனங்கொண்டார். ஆனால், அவனை அந்தச் சிறைச்சாலையிலிருந்து எவ்விதம் வெளிகொள்ளச் செய்யலாம்?

அந்தஅறைக்கதவு நன்றாகப்பூட்டப்பட்டிருக்கிறதே; அறையின் ஒரேயொருசன்னல் தளத்திலிருந்து பத்தடிக்குமேல் இருக்கிறதே; இவன் துள்ளிப்பாய்ந்தாலும் அந்தச்சன்னலைப் பற்றிப்பிடிக்க முடியாதே என்று குருவானவர் யோசித்துக்கொண்டிருக்கையில், கள்வன் குருவானவரை நோக்கி: "சுவாமி தாங்கள் ஏன்நெடுநேரம் யோசிக்கின்றீர்கள்? தாங்கள் செய்யவேண்டியது ஒருகாரியம்மாத்திரம்; தாங்கள்அமர்ந்திருக்கும் கதிரையை அந்தச்சன்னல்அருகில் வைத்துவிட்டு அதன்மேல் ஏறிநில்லுங்கள்; மிகுதியான அலுவலை நான்பார்த்துக் கொள்ளுகிறேன்; நான் தப்பிக்கொள்ள வகைஅறிவேன்" என்றான். குருவானவரும் அப்படியேசெய்ய அவன்பரபாவென்று குருவானவரின் தோள்மீதேறிச் சன்னலின் அடிப்பாகநிலையைத் தாவிப்பிடித்து எம்பி மேலேறிச் சன்னல்வழியாகக் கீழேகுதித்து நொடிப்பொழுதில் மாயமாகமறைந்துவிட்டான்.

கள்வனைத் தூக்கிலிடும்நேரம் வந்ததும் சிறைச்சாலைஅதிபர் கதவைத் திறந்து பார்த்தவிடத்து, அங்கு குருவானவர்மாத்திரம் தனிமையாயிருந்து தமது மந்திரமாலையை வாசித்துக் கொண்டிருக்கக் கண்டார். "மறியற்காரன் எங்கே" என்று அவரிடம்கேட்டபொழுது, அவர் "எனதுகடமை அவனுக்குச் சமயசம்பந்தமான புத்திமதிகளைக் கூறுவது; அவனைக் காவல்செய்யும்சேவகனை எவராவது என்னை நியமிக்கவில்லை; ஒருகாவற்சேவகனை நியமித்துவிடும்படி கேட்டவிடத்தும் அதிகாரிகள் பறுவாய்பண்ணவில்லை; எனது கடமையைநான் செய்தேன்; அவனைத் தப்பியோடாது தடைசெய்வது உங்கள்கடமை; அதைப்பற்றி என்னைவிசாரிப்பதேன்" என்றார். குருவானவர் கூறியதை நீதியரசரிடம் அறிவித்தபோது, அவர் "குருவானவரை நாம் காவற்காரனாக நியமிக்கவில்லை; அவர் தக்ககாவலாளை நியமிக்கும்படி கேட்டவிடத்தும் நாம்பறுவாய்பண்ணவில்லை" என்று சொல்லிவிட்டுக் குருவானவருக்கு ஒன்றுஞ் செய்யாமல் விட்டுவிட்டார். தப்பியோடியவனைத் திரும்பக் கைதுசெய்ய அதிகாரிகள் செய்யாத முயற்சியெல்லாஞ் செய்தும் அவன் மாயமாய் மறைந்தவன்போல எவர் கண்ணுக்குந் தென்படவேயில்லை.

இருபது வருடங்கள் உருண்டோடின. இதே குருவானவர் ஒருநாள் பிரான்ஸிய ஆர்டேன் மலைச்சாரலிலுள்ள காடுகளுக்கூடாகத் தனிமையாகப் பிரயாணஞ்செய்கையில் வழிதப்பி நடுக்காட்டிலே ஒருவெளியில் இராக்காலத்தைத் தனிமையாகச் செலவிட வேண்டியதாயிற்று. பொழுதுபட்டதும் இவர் காட்டுக்குள் தங்குவதற்கு ஆயத்தஞ்செய்கையில் ஒருகமக்காரன் இவரைச் சந்தித்துக் கூறுகுறிப்பாகப் பார்த்துவிட்டுச் சொல்லரிய பேராச்சரியமும், மனமகிழ்ச்சியும் கொண்டான். ஆனால், தனது உணர்ச்சியை அவன் வெளியிற் காட்டாது அவரை நோக்கி: "சுவாமி! இராக்காலத்தில் இந்த அந்தரவழியில் இக்காட்டுக்குள்ளே தாங்கள் தனிமையாகத் தங்குவது புத்தியல்ல; என்னுடன் எனது கமத்துக்கு வாருங்கள்; அங்கு இரவைக் கழித்துப் பொழுது விடிந்ததும் நான் தங்களுக்கு வழிகாட்டி விடுகிறேன்" என்றான். அவனுடைய போக்கினாலும், அவன் தம்மைக் கூறுகுறிப்பாய்ப் பார்த்த பார்வையினாலும் குருவானவர் அவனில் நம்பிக்கை கொள்ளாவிட்டாலும் "இனிச் செய்வதென்ன? ஆபத்து எங்கும் உண்டுதானே" யென்று எண்ணிக்கொண்டு அவனுடன் சென்றார்.

இவருவரும் விரைவிலே கமத்தைச் சேர்ந்தனர். சேர்ந்ததும் கமக்காரன் தனது மனைவியை அழைத்து, ஒருபோதுமில்லாத திறமான விருந்து அன்றிரவு ஆயத்தஞ் செய்யும்படி அவளுக்குச் சொல்லிவிட்டுக் குருவானவரை அழைத்துச்சென்று ஓர் அறையில் உட்காரவைத்துத் தனது மூன்று ஆண்குழந்தைகளையும், இரு பெண் குழந்தைகளையும் அழைத்துவந்து, "எனது அருமைக் குழந்தைகாள்! நீங்கள்எல்லோரும் இந்தச் சுவாமியாருக்குத் தோத்திரஞ் சொல்லுங்கள்; இவர்தான் முன்னொருமுறை எனது உயிரைக் காப்பாற்றியவர்; இவர்இல்லாவிட்டால் இங்கு நான் இருக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டு, "சுவாமி! நான் தங்களுக்குக் கொடுத்த வாக்கை மீறவில்லை; சிறைச்சாலையைவிட்டுத் தப்பியோடிச் சுவிற்சர்லாந்து தேசத்தைவிட்டுப் பிரான்ஸுக்கோடி, இந்தக் காட்டுப்பாகத்தை அடைந்து, ஒருகமக்காரனின் வேலைகாரனாகத் தொண்டுசெய்துவந்தேன்; நான் என்னை முற்றாகத் திருத்திக் கொண்டபடியால் கமக்காரன் என்னில் மிகுந்தபட்சங்கொண்டு, ஈற்றில் தனது ஓரேயொருமகளை எனக்கு வதுவை செய்துகொடுத்தான்; நாங்கள் எல்லோரும் உத்தம கத்தோலிக்கராய் மனப்பாக்கியமாக வாழுகிறோம்" என்றான். இதைக்கேட்ட குருவானவர் பேரானந்தங்கொண்டார். மறியற்காரனைத் தப்பவைத்த நாட்தொடக்கம் மனச்சாட்சியிலே அரிகண்டமடைந்து வந்தகுருவானவர் அன்று சமாதானத்தைக் கண்டடைந்தார்.

---

● பத்துவருடங்களின்பின் சந்திரமண்டலயாத்திரை சாத்தியமாகலாம்; அதற்கிடையில் நியூயோர்க்நகரிலிருந்து கலிபோணியாவுக்கும், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு அல்லது அவுஸ்திரேலியாவுக்கும் சிலமணிநேரத்தில் பறக்குங்குண்டுகளின்மூலம் தபால்களை அனுப்பிவைத்தல் சாத்தியமாவது மிகவும்சுலபமென்று அமெரிக்க போஸ்ற்மாஸ்றர்ஜெனறல் தெரிவித்திருக்கிறார்.

● செயற்கைக்கிரகங்களை ஒலிபரப்பும் நிலையங்களாகக்கொண்டு உலகமெங்கும் ரெலிவிஷன் எனப்படும் தூரப்பார்வைச் சேவையை அடுத்த 10 வருடகாலத்துள் நடத்திவைக்கலாமென்றும், 1969-ம் ஆண்டுக்கிடையிலே மனிதன் சந்திரனை அடையலாமென்றும், 1968-ம் ஆண்டிலே சுக்கிரன், செவ்வாய்க் கிரகங்களுக்குச் செல்ல ஆரம்பிப்பானென்றும் வாஷிங்ரன்நகரிலே நிபுணர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## லூர்துபதி நூற்ருண்டுவிழா நிறைவு

"லூர்துபதி யூபிலி வருடம் மாசிமாதம் 18-ந் திகதியன்று நிறைவாக வேண்டுமென்றும், அர்ச். பெர்னதேத் அம்மாளின் திருநாளன்று இந்நிறைவுவிழா கொண்டாடப்பட வேண்டுமென்றும் பரிசுத்தபாப்பரசர் தீர்மானித்துள்ளபடி, இம்மாதம் 18-ந் திகதி புதன்கிழமை லூர்துபதி நூற்ருண்டுவிழா முடிபாகும். அன்றுதினம் லூர்துபதியிலே நிலமட்டத்தின்கீழ் இருந்துவரும் அர்ச் 10-ம் பத்திநாதரின் மகா தேவாலயத்தில் பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல் பெல்தின் ஆண்டவர் காலை 10 மணிக்கு மகாபாடற்பூசை நிறைவேற்றுவார். அது நிறைவேறியதும் பரிசுத்த பாப்பரசர் வத்திக்கானிலிருந்து வானெலி மூலம் நூற்ருண்டுவிழா முடிவு சம்பந்தமாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தி ஆசி வழங்குவார்.

---

## உலகமும் கத்தோலிக்கரும்

ஐக்கிய அமெரிக்கதேச சின்சினுத்தி நகரிலுள்ள கத்தோலிக்க மாணவர் மிஷன் படையணியால் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கும் "உலகமிஷன் பூகோளப்பட"த்தின் 1958-ம் ஆண்டிற்கான வெளியீட்டில் கண்டுள்ளபடி, சரித்திரத்தில் முதன்முறையாக உலகிலுள்ள கத்தோலிக்கரின் தொகை 50 கோடிக்கு மேற்பட்டிருக்கிறது. உலகின் மொத்தச் சனத்தொகையாகிய 279 கோடியே 77 லட்சத்து 15 ஆயிரம் பேரில் 50 கோடியே 95லட்சத்து 5 ஆயிரம் பேர் — அதாவது 18·2 சதவிகிதமானேர் கத்தோலிக்கரென இந்தப் பூகோளப்படம் காண்பிக்கின்றது. முந்திய வருடத்திலும் அவர்கள் தொகை 1கோடியே 29லட்சத்து 93ஆயிரம்பேரால்—அதாவது 2·6விகிதமாக அதிகரித்திருக்கின்றது.

---

## கருதினுலைத் தருமாறு வேண்டுகோள்

தூரகிழ்த்திசையிலுள்ள ஒரேயொரு கத்தோலிக்கநாடு பிலிப்பைன்ஸ். இதன் வெளிநாட்டு மந்திரியான திரு. பீலிக்ஸ் பேட்ரோ செருனே அவர்கள் அந்நாட்டிலே பாப்பரசரின் ஸ்தானிகராய் இருந்துவருகிறவரான எஜிதியோ வாக்னெஸ்ஸி அதிமேற்றிராணியாரைச் சமீபத்திலே கண்டுபேசிப் பிலிப்பைன்ஸ் நாட்டில் முதற்கருதினுல்ஒருவரை ஆக்கவேண்டுமென்று அங்கே பரக்க எழுந்துள்ள கிளர்ச்சி பற்றி அவருடன் ஆலோசனை செய்யலாயினர். அதனுல், பரிசுத்த ஸ்தானத்தினிடமாகப் பிலிப்பைன்ஸ்நாட்டின் ஸ்தானிகராய்இருந்துவருகிறவரான திரு. ஜோஸ் மரியா டெல்கடோ அவர்கள் தங்கள்நாட்டுக்கு ஓர்கருதினுலைத் தரவேண்டுமென்ற பொதுசன வேண்டுகோளை 23-ம் அருளப்ப பாப்பரசருக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்கவேண்டுமென்று வழிநடத்தப்படவிருக்கின்ருர்.

## ரோமைநகரும் புதிய கருதினுல்மாரும்

ரோமைநகரின் லோட் மேயரும், நகரசபை அங்கத்தவர்களும் சமீபத்திலே வத்திக்கானின் புதிய இராச்சிய மந்திரியாரும், புதிய கருதினுல்மாருள் ஒருவருமான கருதினுல் தார்டினி ஆண்டவருக்கும், ஏனைய புதிய கருதினுல்மாருக்கும் நகர்வாசிகள் சார்பாக ஓர்பொதுவரவேற்பு அளித்தார்கள். புதிய கருதினுல்மார் செனற்சபைமாளிகையிலே சித்திர வஸ்திராலங்காரஞ் செய்யப்பெற்ற மண்டபத்திலே லோட் மேயராலும், சபை அங்கத்தவர்களாலும் வரவேற்கப் பெற்ருர்கள். வரவேற்பு உபசாரணைமுடிவிலே லோட்மேயர் அவர்கள்ஒவ்வொருவருக்கும் ரோமைநகரின் பிரதான கட்டடங்களின் பிரதிமைப்படங்களை அடக்கியதாய் அழகாகக்கட்டப்பட்ட ஒவ்வோர் புத்தகத்தை அன்பளிப்புச் செய்தார்.

---

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

அடுத்துநிகழும் 1960-ம் ஆண்டிலே நிகழவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின் மாபெரும் கூட்டங்களில் அதிகமான வைகள் அந்நகரின் மத்தியிலுள்ள தெரேசியென் வீஸ்என்ற மைதானத்திலே நடந்தேறவிருக்கின்றன. இந்த மைதானம் பத்துலட்சம்மக்களை அடக்கக்கூடியதாகும். எஞ்ஜினியர்களும், வீதிகள், கட்டடங்களைச் செப்பனிடுகிறவர்களும், சிற்பிகளும் அந்நகரிலுள்ள ஆலயங்கள், கட்டடங்களைப் புதுப்பித்துச் சித்தஞ்செய்வதில் ஏற்கனவே ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

---

## திருச்சபையின் புதிய வேதபாரகர்

இத்தாலியிலே பிறின்டிஸிநகரில் 16-ம் நூற்றுண்டைச்சேர்ந்த ஓர் கப்புச்சின் சபைக் குருவானவராய் விளங்கியிருந்த அர்ச். லோறென்ஸைச் சாதாரண திருச்சபையின் வேதபாரகராகப் பிரகடனஞ்செய்வதான திருச்சடங்காசார திருச்சங்கத்தின் அதிகாரசாசனத்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் அங்கீகரித்திருக்கின்ருர். பிறின்டிஸி நகரிலே 1559-ம் ஆண்டு பிறந்த அர்ச். லோறென்ஸ் 1619-ம் ஆண்டு லிஸ்பன்நகரில் மரணமடைந்தார். தமது கலைவன்மையாலும், பரிசுத்த தனத்தாலும், பலபாஷாஞானத்தாலும் கீர்த்தி பெற்றிருந்த இவர் சமயப்புரட்சி ஏற்பட்டகாலத்திலே சமய பேதகர்கள், முஸ்லீம்களின் விபரீத கொள்கைகளைக் கண்டித்து நிராகரிக்குமாறு ஐரோப்பா முழுவதும் பிரயாணஞ் செய்திருக்கின்ருர். இவர் திருச்சபையை ஆதரித்துப் பதின்மூன்று பிரபந்தங்கள் எழுதியிருக்கின்ருர்.

## கத்தோலிக்கரும் கம்யூனிஸமும்

"கம்யூனிஸத்தின் உண்மையான சுபாவத்தை அதிகம் நன்ருய் அறிந்தவர்கள் கத்தோலிக்கரேயென்று தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்; கத்தோலிக்கதிருச்சபை அதனை எதிர்த்துப் போராடுவதெல்லாம் அரசியல் நோக்கமாக அல்ல; ஆனல், ஆத்மீகசம்பந்தமாகவே" என்று சுதந்திரசீனுவின் ஜனுதிபதியான ஜெனறல் சியாங் கை-ஷெக் அன்று ஓர் பேட்டியிலே அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர். மேலும் பேசியவிடத்து: "வியெற்னும், தென்கோறியா, பிலிப்பைன்ஸ், சீன நாடுகளின் தலைவர்கள் கடவுளில் கொண்டுள்ள நம்பிக்கையே கம்யூனிஸத்தை எதிர்த்து நிற்பதற்குப் பேருதவியாய் நின்று பலமளித்து வருகின்றது; கிறீஸ்து வேதம் ஓர் மேலைத்தேச சமயமென்று குற்றஞ் சுமத்துகின்ற ஆசிய கம்யூனிஸ்தர்கள் கிறீஸ்து வேதத்தைப்பற்றி அறியுமாற்றல் இல்லாதவர்களே; ஓர்சமயம் என்றமட்டிலே கிறீஸ்துவேதம் கிழக்குக்கும், மேற்கிற்குமிடையே பூகோளசாஸ்திர வேறுபாடுகளை அறியமாட்டாது; கிறீஸ்து வேதம் சீனமக்களின் வாழ்க்கை முறையுடன் நன்கு ஒத்துப் போகக்கூடிய அம்சங்களைக்கொண்ட ஓர் சமயமாகும்; அடிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் சுதந்திரத்திற்காக உலகமுழுவதும் செபப் படையணி ஒன்றைப் பரக்க நடத்துவதற்கு எனது மனப்பூர்வமான ஆதரவை அளிக்கத் தயாராயிருக்கிறேன்; செபம் என்பது ஓர் ஞான நடவடிக்கை; அத்தகைய ஓர் படையணி சமயகுழுஒன்றின் தலைமையைப் பெற்றிருக்க வேண்டும்; இந்தத் தலைமை கத்தோலிக்க திருச்சபைக்கு இயற்கையாக அமைந்துள்ளதாகும்" என்று ஜெனறல் சியாங் கை-ஷெக் கூறலாயினர்.

---

## புதிய பாப்பரசர்கால முதல் அர்ச்சியசிட்டர்கள்

23-ம் அருளப்ப பாப்பரசர் தமது ஆளுகையின் முதல் இரு அர்ச்சியசிட்டர்களை வருகிற சித்திரைமாதம் 12-ந் திகதியன்று பிரகடனஞ் செய்வாரென வத்திக்கானிலிருந்து சென்ற திங்கட்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அன்று தினம் ஓர்ஸ்பானிய கன்னியாஸ்திரியாயிருந்து 1854-ம் ஆண்டு மரித்த முத். யுவக்கீனு தே வெத்றுனுவும், ஓர் இத்தாலிய கப்புச்சின் சபைச் சந்நியாசாயிருந்து 1670-ம் ஆண்டு மரித்த செஸ்லே நகரின் முத். சாள்ஸும் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்படுவார்கள். இவ்விருவருக்கும் சென்ற கார்த்திகைமாதம் 23-ந் திகதியன்று அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டுதற்கான ஆயத்தம் நடைபெற்றுவந்தது. ஆனல், 12-ம் பத்திநாத பாப்பானவரின் மரணத்தாலும், 23-ம் அருளப்ப பாப்பானவரின் தேர்தலாலும் திருப்பட்ட வைபவம் பின்போடப்படலாயிற்று.

---

## "சட்ட விரோத"மான பாடசாலைகள்

மெக்சிக்கோவிலுள்ள 1,900 கத்தோலிக்க பாடசாலைகள் "சட்டவிரோத" மானவையாய் இருந்தபோதிலும் சுமார் மூன்று லட்சம் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றி வருகின்றன. அந்நாட்டிலே கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றகாலத்தில் ஆக்கப்பட்ட சமய விரோத சட்டங்களில் பெரும்பான்மையின நடைமுறைக்குக் கொண்டுவரப்படாததும், அதிகமான பாடசாலைகள் தேவைப்படுவதுமே இதற்குக் காரணமாகும். இந்தத் தேவை பற்றி அந்நாட்டின் ஜனுதிபதி அடல்போ கோட்ரினெஸ் விளக்கங் கூறியவிடத்து, பாடசாலைக்குச் செல்லும் வயதுடையவர்களாய்ச் சுமார் 30 லட்சம்பிள்ளைகள் கல்விகற்பதற்குப் பாடசாலைகள் இல்லாதிருப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்தப் பிள்ளைகளில் பெரும்பான்மையினர்கள் நாடுபுறங்களில் வசித்திருந்த போதிலும் சுமார் 60,000 பிள்ளைகள் மெக்சிக்கோநகரிலே இருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம கல்விபயிற்ற 20,359 பாடசாலைகளுடன் 60,466 ஆசிரியர்கள் தேவைப்படுகிருர்கள்.

---

## பிரான்ஸும் குருத்துவ அழைத்தலும்

பிரான்ஸிலே திருச்சபை இவ்வருடம் அதிகமான குருத்துவ அழைத்தல்களுக்கான ஞானப் படையணி ஒன்றை நடத்தவிருக்கின்றது. இந்தப் படையணியானது ஆர்ஸ்நகரின் பங்குக்குருவரும் (கூரேதார்ஸ்), பங்குக்குருவர்களின் பாதுகாவலருமான அர்ச். வியான்னி அருளப்பர் பரமபதமடைந்த நூரும் ஆண்டுவிழாக் கொண்டாட்டத்துடன் ஏககாலத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்வருடம் ஆடிமாதத்திலே அங்கு லையன்ஸ் பட்டணத்தில் நடந்தேறவிருக்கின்ற தேசிய சற்பிரசாத சமாகமத்தின்பீடிகை "திவ்விய நற்கருணையும், குருத்துவமும்" என்பதே. ஆயினும், இந்தச் சமாகமத்தின் முதலாவது கூட்டம் ஆர்ஸ்நகரிலேயே நிகழவிருக்கிறது. அங்கே வியான்னி அருளப்பர் தியஅலகையுடன் அநேக போராட்டங்கள்நடத்திய அவரது கோவிலுக்கும், குருமனைக்கும் தரிசனைகள் நடைபெறும். பிரான்ஸிலே குருமார் அத்தனை குறைவாய் இருப்பதாலே சிலமேற்றிராசனங்களில் கோவில்கள் மூடப்படலாயின; அன்றேல், ஒரு குருவானவர் அநேக விசாரணைப் பங்குகளில் தொண்டாற்றி வருகின்ருர்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல், எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

## மாசிமாதம்

**பொதுக்கருத்து :** நமதுகாலத்து லோகாயதக் கொள்கையை ஒறுத்தலினாலும், ஒருசந்திப் பழக்கத்தினாலும் திறம்பட எதிர்க்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து :** சீனாவில் பொதுவுடைமைக்காரரின் மறைமுகமான சூழ்ச்சிகளினால் கிறீஸ்துவர்கள் திருச்சபையின் ஒருமைப்பாட்டிலிருந்து பிரிந்துபோகாமல் இருப்பதற்காக மன்றாடிக்கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1959-ம் ஆண்டு
மாசிமாதம் 12-ந் திகதி


## கொழும்பு அதிமேற்றிராசன சற்பிரசாத சமாகமம்

கொழும்புமாநகரிலே சந்தலூஸியாவின் அதிமேற்றிராசனக்கோவிலிலே சென்ற 5-ந் திகதி வியாழன்முதல் 8-ந்திகதி ஞாயிறுவரையில் மாபெரும் பக்திப்பிரவாகம்பெருகப் பெரும் பிரஸ்தாபமாய்நடந்தேறிய சற்பிரசாத சமாகமமானது ஸ்ரீலங்காவின் கத்தோலிக்கதிருச்சபைச் சரித்திரத்திலே — சிறப்பாக அதிமேற்றிராசன சரித்திரத்திலே பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத்தகுந்த ஓர்புனிதமான சம்பவமெனில் மிகையாகாது. சமாகமம்நிகழ்ந்த நான்கு தினங்களையும் அதிமேற்றிராசன கத்தோலிக்கமக்களும், ஏனைய மேற்றிராசனங்களிலிருந்து போய் அதிலேகலந்துகொண்ட பிற கத்தோலிக்கமக்களும் நான்கு பெரும்சற்பிரசாத பெருநாட்களாகப் பெரும்பக்திப்பரவசத்துடனும், ஞானமனோற்சாகத்துடனும் கொண்டாடித் திருச்சபையின் சீவநாடியும், தங்களது விசுவாசத்தின் உரைகல்லும், பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தங்கள்சீவிய அப்பமுமாகிய திவ்விய சற்பிரசாதநாதர் மட்டிலே தங்களுக்குள்ள ஆழ்ந்த பய பக்தியையும், அணைகடந்த பற்றுதலையும் பிரசித்தமாகக் காண்பித்துநின்றார்கள். லூர்துபதிக் காட்சிகளின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடு முகமாகவும, ஸ்ரீலங்காவிலேதிவ்வியபூசை முதன்முதலாகக் கொழும்பில் நிறைவேறிய 450-ம் ஆண்டினதும், உலாந்தவேதகலாபனையின் 300-ம்ஆண்டினதும், கொழும்பு நகரின் பாதுகாவலரான அர்ச். லோறென்சியார் வேதசாட்சியான 17-ம்நூற்றாண்டினதும் ஞாபகார்த்தமாகவும் பெருமித ஆயத்தங்களுடனே அத்துணை பெருஞ்சிறப்பாகவும், ஞானப் பரிமளிப்பாகவும் நடைபெற்ற சமாகமத்தை அப்போஸ்தலிக்கஸ்தானுபதியாகிய மகாமேன்மை தங்கிய ஜேம்ஸ் நொக்ஸ் ஆண்டகையவர்கள் 5-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5-15 மணிக்குக் கொழும்பு அதிமேற்றிராணியாரும், ஸ்ரீலங்காவின் சகல மேற்றிராணிமார்களும், அமலோற்பவ மரியநாயகி குருபரித்தியாகிகள் சபையின் அதிசிரேஷ்ட சுவாமிகளும், பன்னூற்றுக்கணக்கான குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரும், பல்லாயிரக் கணக்கான விசுவாசிகளும் சன சமுத்திரம்போலத் தேங்கியிருக்கச் சந்தலூசியாவின் அதிமேற்றிராசனக்கோவிலிலே ஞானசம்பிரம திருவைபவங்களுடன் ஆரம்பித்துவைத்தார். உயரிய தம்பத்திலே சமாகம கொடி ஏற்றப்பட்டு இளந்தென்றலில் அசைந்தாடத் "தூய ஆவியானவரே வாரும்" எனும் கீதத்தைச் சமூகமாயிருந்த மாபெரும் பக்தர்குழாம்முழுவதும் அன்பு பெருக ஒரேகுரலாய் இன்பகரமாகப்பாடியது. அதன்மேல் ஸ்தானுபதி ஆண்டகைஅவர்கள் சமாகம ஆரம்ப உரையை நிகழ்த்திமுடித்ததும் பாடகர் குழாம் சமாகமகீதத்தை இங்கிதமாகப்பாடிநின்றது. அதன்மேல் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றுச் சிறிதுவேளையால் குருப்பிரசாதிகளின் திருமணித்தியாலம் ஆரம்பமாயிற்று. அத்துடன் நகரிலுள்ள பங்குக் கோவில்களிலெல்லாம் இராஆராதனை முறைமுறையாக இடையீடின்றித் தொடர்ந்து நடைபெறத் தொடங்கியது. அதிமேற்றிராசனக்கோவிலிலும் பல்வேறுபக்திக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களால் பகல்பகலாக முறையாகத்தொடர்ந்து சற்பிரசாதநாதருக்கு ஆராதனை வழிபாடுகள்நடத்தப்பட்டுவரலாயின. சமாகமத்தின் மிகவிசேஷப்பட்ட சம்பவங்களில்ஒன்று, அதுநடந்தேறிய நான்கு தினங்களிலும் இந்த ஆராதனை வழிபாடுகள் இடையறாது நடந்துகொண்டிருந்தமையாகும். மற்றொன்று, கொழும்பு அதிமேற்றிராசனத்திலே அடங்கியுள்ள 74விசாரணைப்பங்குகள் அதில் கலந்துகொண்டமையாகும். இவ்விதம் நான்குதினங்களாகப் பெரும் பக்தியருட்சிக் குரியவிதமாய், எவர்க்குமே மனோகவர்ச்சிக்குரியவகையாய் நடைபெற்ற சற்பிரசாதசமாகமத்துக்கு முடிசூடியதுபோன்று ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் நடந்தேறிய திவ்விய சற்பிரசாத மகாசுற்றுப்பிரகாரம் காட்சியளிக்கலாயிற்று. சிறப்பாக அலங்கரிக்கப்பெற்றிருந்த ஓர்சிங்கார இரதத்திலே திவ்வியசற்பிரசாதநாதர் எழுந்தருளிச் சிங்கார அலங்காரமுற்று விளங்கிய நாலரைமைல்நீளமான வீதிகளினூடாக நாலரைமணி நேரமாகப் பவனிசென்று கடைசியாக மின்சாரதீபங்களால் பகலேபோன்று பிரபையுற்றிருந்த சென்பெனடிற்கல்லூரி மைதானத்திலே மன்னர்மன்னவரின் மணிமாடம்போன்று அமைக்கப்பட்டுக் கண்கொள்ளாக் காட்சியளித்துநின்ற அழகிய பெருமாடத்திற்கோர் அணிகலம் போலவிளங்கிய பலிபீடத்தை அடைந்ததும் சுமார்ஒருலட்சம் பக்தர்கள் சமூகமாகி அஞ்சலி செய்துநிற்க, திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பெற்றுச் சமாகமம் மங்கலகரமாக நிறைவாயிற்று.

## அமலோற்பவ மரியநாயகிசபை அதிசிரேஷ்ட சுவாமிகளின் யாழ்ப்பாண விஜயம்

அமலோற்பவ மரியநாகி குருபரித்தியாகிகள் சபையின் அதிசிரேஷ்டரான மகாவண. லேயோ டெஷாத்தெலேசுவாமிகள் கொழும்புநகரிலே பிரபல்யமாக நடந்தேறிய சற்பிரசாத சமாகமத்துக்குச் சமூகமளித்தபின் நம்முன்னர் தெரிவித்தபிரகாரம் சென்ற 10-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11மணியளவில் விமான மார்க்கமாக இலங்கையிலே சபைச்சிரேஷ்டராய் இருந்துவருகிறவரான அதிவண. ஜி. போர்தின்சுவாமியவர்கள் சமேதராய் யாழ்ப்பாணம்வந்து சேரலாயினர். பலாலி விமானநிலையத்திலே நம்மேற்றிராணியாண்டவரவர்கள் அநேக குருப்பிரசாதிகள், மற்றும் கத்தோலிக்கபிரமுகர்கள் சமேதராய்க்காத்திருந்து அவரை வரவேற்றுநின்றார். அதன் மேல் சுவாமியவர்கள் அழகிய மலர்மாலை சூட்டப்பெற்றுக் குருமாரும், ஏனையோரும் சுமார் இருபது கார்களிலே முன்செல்ல ஊர்வலமாக மேற்றிராசனமாளிகைக்கு எழுந்தருளினார் அபபோது சுமார் 250 இளைஞர்கள் துவிச்சக்கரவண்டிகளில் ஊர்வலமாக எதிர்கொண்டுசென்று சுவாமிகளைச்சந்தித்து, முந்திய ஊர்வலத்துடன் கலந்துகொள்ளவே, சுவாமிகளும் பேரூர்வலமாய் அர்ச். மர்த்தினார் குருமடச் சந்தியை அடைந்து, இருமருங்கும் பாடசாலைப்பிள்ளைகள் அணிவகுத்துநின்று ஆனந்தக்கூச்சலிட்டு வாழ்த்திநிற்க, மேற்றிராசன மாளிகைவாயிலைச் சேரலாயினர். அங்கே இம்மேற்றிராசனத்திலுள்ள பல்வேறு விசாரணைப் பங்குகளிலிருந்து பெருந்திரளாக வந்துகூடிய குருப்பிரசாதிகள் அவரைவரவேற்று ஆசாரஞ் செய்துநின்றார்கள். சாயந்தரம் ஆசனக்கோவில் மைதானத்திலே மேற்றிராணியாண்டவரவர்கள் தலைமையில் குருப்பிரசாதிகளும், பாடசாலைப்பிள்ளைகளும், ஏனையோருமாகப் பல்லாயிரக்கணக்கானமக்கள் குழுமியிருந்த சமுகத்தில் சுவாமிகளுக்கு ஓர்ஆடம்பரமான வரவேற்பு உபசாரம் அளிக்கப்படலாயிற்று.

(இதன் விபரம் மறுமுறை வெளியாகும்.)

—*—

# சுதேச வர்த்தமானம்

### பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறல்

இலங்கைப் பொலிஸ்இன்ஸ்பெக்றர் ஜெனறலான திரு. ஒஸ்மன்ட் டி சில்வா வருகிற ஆடிமாதத்திலே தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறுவாரெனப் பிரதமர்பண்டாரநாயகா அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### உத்தியோக தானமாற்றம்

யாழ்ப்பாணக் கச்சேரியிலே கடந்த ஆறுவருடங்களாக உபவிஸ்காலாகக் கடமைபார்த்துவந்தவரான திரு. எஸ். எம். ஜே ஹாயிஸ்அவர்கள் இம்மாதம் 16-ந்திகதிதொடக்கம்கொழும்பிலுள்ள பி. டபிள்யு. டி. தலைமைக்காரியாலயத்துக்கு உத்தியோகதானமாற்றம் செய்யப்பெற்றிருக்கிறாரென அறிகின்றோம்.

### கொலைகளும் விபத்துமரணங்களும்

இவ்வருடத்தின் முதல் 39 நாட்களிலும — அதாவது இந்த மாசிமாதம் 8-ந்திகதிவரையிலே இலங்கையில் நிகழ்ந்துள்ள கொலைகளாலும், விபத்து மரணங்களாலும் 107 பேர்உயிர்துறந்திருக்கின்றனர் இவர்களிலே கொலையுண்டவர்கள் 62பேர், வீதிவிபத்துக்குள்ளாய் உயிர்இழந்தவர்கள் 45பேர். நிகழும் மாசிமாதத்தின் முதல்வாரத்தில் 15கொலைகளும், 6விபத்துமரணங்களும் நிகழ்ந்துள்ளன.

### மகாவலிகங்கையின் திருப்பம்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வெள்ளிக்கிழமைகாலை நிதியமைச்சர் கொண்டுவந்த உபமான்யப்பிரேரணை பற்றிய விவாதம்நடைபெற்றபோது, மகாவலிகங்கையை வடக்கேதிருப்புவதற்கான திட்டம் இன்னும் ஏன் தயாரிக்கப்படவில்லையென்று கேட்கப்பட்டபோது, மகாவலிகங்கைத் திட்டம் பற்றி நிபுணர்கள் ஆராய்ந்துவருவதாகவும், அடுத்தவரவுசெலவுத்திட்டத்திலே மகாவலிகங்கையைப் பொல்வலையில் திருப்புவதற்கானநிதி ஒதுக்கப்படவிருப்பதாகவும் காணிமந்திரி பதிலளித்திருக்கின்றார்.

### பண்ணைக் கடற்பாலம்

பண்ணைக்கடற்பாலைதப் பாலத்தின் எஞ்சியபகுதி வேலைகள் அனைத்தையும் இவ்வாண்டுமுடிவாகுமுன் பூர்த்தி செய்துவிடுவதாக அரசாங்க கட்டட வேலைப்பகுதி அதிகாரிகள் தமக்குஉறுதிகூறியிருப்பதாக ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையாஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். இந்தப் பாலத்தின் எஞ்சியபகுதிவேலைகளைப் பூர்த்திசெய்வதில் அரசாங்க கட்டட வேலைப்பகுதி தற்போது தீவிரகவனஞ் செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

### கொழும்பு நகரசபைத்தேர்தல்

வருகிறகார்த்திகைமாதக் கடைசியிலாவது அன்றேல்மார்கழிமாத ஆரம்பத்திலாவது கொழும்புநகரசபைத்தேர்தலை நடத்துவதற்கான சகலஒழுங்குகளையும் செய்துமுடிக்குமாறு தலதாபனமந்திரி சென்ற வெள்ளிக்கிழமை காலை தேர்தல்கம்மிஷனருக்கு உத்தரவிட்டிருக்கின்றார். தொகுதிநிர்ணயக் கம்மிஷனின் சிபாரிசுப்படி புதியநகரசபையில் 37 அங்கத்தவர்கள் இருப்பார்கள் இந்த 37 அங்கத்தவர்களையும் தெரிவுசெய்வதிலே 1,75,000 வாக்காளர்கள் கலந்துகொள்வார்கள்.

### ஆசிரியபயிற்சிக் கல்லூரிகள்

கோப்பாய், அட்டாளைச்சேனை, பலாலினாலும் இடங்களிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் விசாலமாக்கப்படவிருக்கின்றன. அங்ஙனம் விசாலமாக்குமிடத்து மாணவர்கள் அதிகமானவசதிகளைப்பெறவும், அதிகமானோர் பயிற்சிபெறவும்முடியும். இவற்றிலே சுமார் 17லட்சத்து 70 ஆயிரம்ரூபாசெலவில் விடுதிச்சாலைகள், விரிவுரை நிலையங்கள், மைதானங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், சபாமண்டபங்கள் முதலியன அமைக்கப்படவிருக்கின்றன. கோப்பாய்க்கல்லூரிக்கு 50 ஆயிரம்ரூபாவும், அட்டாளைச்சேனைக்கு 5லட்சம்ரூபாவும், பலாலிக்கு 5லட்சம்ரூபாவும் செலவிடப்படுமெனத் தெரியவருகிறது.

### பண்டமாற்றுக் காலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்துசதம் கொடுத்தேயாக வேண்டும். அப்படியேநாம் சுய நலத்தையும்தேடி, ஆன்மஅமைதியையும் தேடமுடியாது. பாப இன்பத்தையும், கடவுளுடன்ஐக்கியத்தையும் அனுபவிக்கமுடியாது. ஒன்றுக்குப்பதிலாகமாத்திரம் மற்றொன்றைப்பெறலாம்.

ஆகவே, யேசுவின்சேவை நுகமும், சுமையும்என்பது வெளிப்படை. ஆயின்,யேசுபிரான்கூறியதுபோன்று "இனிமையான நுகம்; இலகுவானசுமை"என்க.

---

### புரட்சிவிசாரணை கைவிடப்பட்டது

புரட்சிக் குற்றச்சாட்டின் பேரிலே இரண்டுமாதம் ஓய்வெடுத்திருந்த உதவிப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. சிட்னி டீ சொய்சா சென்ற 3-ந் திகதியன்று மீண்டும்தமதுபதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அவர்மீது புரட்சிக்குற்றச்சாட்டுச் சுமத்த ஆதாரம் எதுவுமில்லையென்று விசாரணையின்போது தெரியவந்தமையால் புரட்சிக்குற்றச்சாட்டு விசாரணைகளெல்லாம் கைவிடப்படலாயின.

### பஸ்தொழிலாளரின் நடவடிக்கை

வடஇலங்கைப் பஸ்தொழிலாளர்சங்கம் சமீபத்தில்செய்துகொண்ட ஓர்தீர்மானப்படி, இப்போதுபஸ்களில் வேளவுக்குமேலதிகமாகப் பிரயாணிகளை ஏற்றுவதுமில்லை, ஓடத்தகுதியற்றபஸ்களை வெளியேஎடுப்பதுமில்லை. அதனால்பிரயாணிகளின் தேவைக்குப் போதாத குறைந்ததொகையான பஸ்களே வீதிகளில்ஓடுவதால் பிரயாணிகள்பலர் பஸ்களில்இடம்கிடையாது அவலப்படுகின்றனர். இலங்கைப் போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணத்திலுள்ள சிலடிப்போக்களில் நடைமுறையில்கொண்டுள்ளதொடர்ச்சியற்றவேலைமுறையை எதிர்க்கும்முகமாகவே பஸ்தொழிலாளர்கள் இத்தனைகடவடிக்கைகளை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

### நீர்கொழும்புக் கடலேரி

மீன்பிடிதொழிலுக்கு ஏற்றதாகும்படி ஏறக்குறையப் பத்துலட்சம்ரூபா செலவிலே நீர்கொழும்புக்கடலேரி ஆழமாக்கப்படவிருக்கிறது. இந்தக் கடலேரியிலே மீன்பிடிக்கும்இடங்கள் போதிய ஆழமற்றிருப்பதாலும், அவற்றிலே கற்பார்களிருப்பதாலும் அப்பகுதியிலுள்ள மீன்பிடித்தொழிலாளர்கள் தேவைக்கேற்றவாறு மீன்பிடிக்கமுடியாத நிலைமையில்இருப்பதாகவும், அதனால் மீன்பிடி தொழிலையே நம்பிவாழும் பதினயிரம்குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கைத்தொழில்—கடற்தொழில்மந்திரிக்குமுறையீடுசெய்யப்பட்டதன் பேரிலே நீர்கொழும்புக் கடலேரி ஆழமாக்கப்பட விருக்கிறது. இந்தக்கடலேரி நண்டு, இறால்ஆகியவற்றிற்குப் பிரசித்திபெற்றதாகும்.

### கௌரவமாக விடுதலையானர்

இலங்கை ரோயல்கடற்படைக்குக் கடந்தபலவருடங்களாகத் திறமையுடன்பணியாற்றிய கமாண்டர் இராஜநாதன் கதிர்காமர்மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளின்பேரிலே இராணுவக்கோடு விசாரணைநடத்தி அவரை நிரபராதிஎன்று விடுதலைசெய்தது. அவர்கௌரவமாக விடுதலைசெய்யப்பெற்று, மறுபடியும் தமதுவாளைப் பெற்றுக்கொண்டார். "கௌரவமான விடுதலை" என்றதீர்ப்புத்தான் எந்த ஒருஎதிரிக்கும் கொடுக்கப்படும் மிகப்பெரிய மரியாதையான தீர்ப்பாகும். இராணுவக்கோட்டின்சட்டப்படி, மிகவும்அபூர்வமாகவே இத்தத்தீர்ப்புக் கொடுக்கப்படுகிறது. அதவும் எதிரியின் சுயகௌரவம் பாழாகுமெனத் தெரியவந்தால்மட்டுமே இத்தகையஒரு தீர்ப்பு அளிக்கப்படலாம்.

### பாப்பரசர் சூடிய திருமுடி

23-ம் அருளப்ப பாப்பரசர் தமது மகுடதாரண திருவைபவத்தின்போது சூடிய திருமுடியானது 1878-ம் ஆண்டு 13-ம் சிங்கராய பாப்பானவரும், அவரைப் பின்தொடர்ந்துவந்த பாப்புமார்களும்சூடிய அதேமும்மடிக் கிரீடமாகும். வேறும் மும்மடிக் கிரீடங்களை வத்திக்கான் கொண்டிருந்தபோதிலும் 1878-ம் ஆண்டு முதன்முதலாகப் பாவிக்கப்பட்ட அதேகிரீடத்தையே புதிய பாப்பரசர் சூடலாயினர். அதற்குக் காரணம் இது அதிகம் பாரங்குறைந்ததாய் இருப்பதேயாகும். இதன் நிறை ஏறக்குறைய இரண்டு றுத்தலாகும். தரிப்பவர்களுக்கு அதிக பாரம் தோன்றாதிருக்கும்படியாகவே இத்தக் கிரீடம் சூட்டப்படலாயிற்று. விலையேறப்பெற்ற நவமணிகள் பதிக்கப்பெற்ற இந்த மும்மடிக்கிரீடம் வத்திக்கானின் பலாத்தினிய காவலர்களால் 1877-ம் ஆண்டு 9-ம் பத்திநாத பாப்பானவருக்கு அவரது மேற்றிராணித்துவ 50-ம் வருட செம்பொன் யூபிலி விழாவின்போது அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும்.

---

### திருமணவைபவம்

#### சில்லாலை

சில்லாலைவாசரும், காலிங்கராயர் முதலியார் வம்சத்தில் உதித்தவரும், திரு. மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளையின் கனிஷ்டபுத்திரனும், கெடுந்தீவுக் கட்டளைக்குரவர்வண. யோண்சிங்கராயர் சுவாமியவர்களின் சகோதரரும், தற்போது இளைப்பாறியிருக்கும் சங். சின்னர்சென்டோனுவின் பெருமகனும், இலங்கை மோட்டர்வாகன பதிவுஇலாகாப் பிரதமகந்தோரில் லிகிதராகக் கடமையாற்றி வருபவருமான திருவளர்செல்வன் எம். வேதநாயகம்அவர்கட்கும், திரு. சூசைப்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளையின் சிரேஷ்டபுத்திரியும், நாரந்தனை அலேசுப்பிள்ளை உடையார் வம்சவழித்தோன்றலும், சுருவில் அன்னைமரிமாதா ஆலயமூப்பராயிருந்து காலஞ்சென்ற திரு. பஸ்ரியாம்பிள்ளை சூசைப்பிள்ளையின் பேர்த்தியும், திரிகோணமலை சென்மேறிஸ் பாடசாலை ஆசிரியையுமான திருநிறைசெல்வி பஸ்ரியாம்பிள்ளை செல்வம் அவர்கட்கும் கடந்த தைமாதம் 21-ம் திகதி புதன்கிழமைகாலை 7-30மணியளவில் திரிகோணமலை சென்மேறிஸ் ஆலயத்தில் கட்டளைக்குரவர்வண. ஒ. கோவட்சுவாமியவர்களால் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேற்றிவைக்கப்பட்டது. பின்னர்நடைபெற்ற பாடற்பூசையின்பின் புதியதம்பதிகள் பிரதிமைப்படங்கள் பிடிக்கப்பட்டு, புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று மோட்டார்தபவனியாக மணமகள்இல்லம் சேரவே, அங்கு திருமலைசென்மேறிஸ்பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், மற்றும்பல நண்பர்களும் தம்பதிகட்கு அன்பளிப்புகள்வழங்கி ஆசிகள்கூறிநிற்க, பரிமளிப்பான உபசாரணை நடைபெற்றது. பின்னர்தம்பதிகள் 24-ம்திகதி சனிக்கிழமைமாலை சில்லாலை சென்மேரிஸ்ஆலயத்தை அடைந்ததும், அங்கு கட்டளைக்குரவர் வண. எல். டெசிசுவாமியவர்கள் அவர்களை ஆசீர்வதித்ததும், மலர்மாலைகள் அணியப்பெற்று வாத்தியவரிசைகள்சகிதம் மணமகன் இல்லம்சேரவே அங்கும்பரிமளிப்பான உபசாரணை நடைபெற்றது. இப்புதிய தம்பதிகள் அட்ட ஐஸ்வரியங்களும் பெற்றுவாழ எம்பெருமான்யேசு திருஅருள் பாலிப்பாராக.

# ஆசிரியர்களுக்கு

## திரு. P. M. வேதநாயகம்பிள்ளை, B. A.

அவர்கள் வெளிப்படுத்திய

# சூழல்விளக்கவாசக

வரிசையில்

2-ம், 3-ம், 4-ம், 5-ம் வகுப்புகளுக்குரிய நூல்கள் தயாராய் வெளிவந்துவிட்டன.

3-ம், 4-ம் வகுப்புகளுக்குரியன கூடுதலான பாடங்கள், படங்கள், திருத்தமாதியவற்றுடன் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துவிட்டன.

ஆசிரியர்கள் இந்நூல் வரிசைகளுக்கு முன்காட்டிய ஆதரவைத் தொடர்ந்து காட்டுமாறு மிக விநயமாக வேண்டுகிறோம்.

பதிப்பாளர்.

# பொதுவர்த்தமானம்

### அமெரிக்க வெள்ளைமாளிகை

வெள்ளைமாளிகைஎன்பது அமெரிக்க ஜனதிபதியின் வாசஸ்தலமாகும். திரு. ஜோர்ஜ் வாஷிங்ரன் தெரிவுசெய்தகாணியிலே இதுகட்டப்பட்டுள்ளது. இதிலேமுதன்முதலாகஅமெரிக்க இரண்டாவதுஜனதிபதியான திரு. ஜோண் அடம்ஸ் 1850-ம்ஆண்டு குடியேறி வசிக்கத்தொடங்கினர். பலமுறைகளிலே திருத்தியமைக்கப்பட்ட இந்தமாளிகை 1952-ம்ஆண்டு முற்றுப்பெறப்புதுப்பிக்கப்பட்டது. வெள்ளைமாளிகையென்று பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற இந்தமனையிலே 132 அறைகள் இருக்கின்றன. இதன்கீழ்த்தளத்தைத் தரிசிக்கப் பொதுமக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தினமும் ஆயிரவருக்குமேற்பட்டமக்கள் இம்மாளிகைக்கு விஜயஞ்செய்கின்றார்கள். இதிலுள்ள பத்திரிகைஅறையிலே தினம் 24மணிநேரமும் பத்திரிகைநிருபர்களைக் காணலாம். பத்திரிகைகளுக்கென்றும், வானொலி, ரெலிவிஷன் நிலையங்களுக்கென்றும் ஜனதிபதி அடிக்கடி செய்திமகாநாடுகள் நடத்துவதே இதற்குக்காரணமாகும்.

### இந்திய காங்கிரஸ்தலைவர்

இந்திய தேசியகாங்கிரஸின் புதிய தலைவராகத் திருமதிஇந்திராகாந்தி தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். தேர்தல்அதிகாரி தேர்தல்அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்களைப்பார்வையிட்டபின் அவருக்குப் போட்டியில்லையென்றுகண்டு அவரே புதியதலைவராகத் தெரிவுசெய்யப்பெற்றாரென அறிவித்தார். திருமதிஇந்திராகாந்தி பாரதப்பிரதமர் பண்டிதநேருஅவர்களின் புதல்வியாவர். காங்கிரஸ்கட்சி ஆரம்பமான 74வருடகாலத்திலே அதன் தலைமைப்பதவிக்குவந்த பெண்மணிகளில் இவர் நான்காம்ஆளாவர். பண்டிதநேருஅவர்களின் குடும்பத்திலே காங்கிரஸ்கட்சித் தலைவராகும் மூன்றுவதுஅங்கத்தவர் திருமதிஇந்திராகாந்தியாவர். முதன்முதலாகப் பிரதமர் நேருஅவர்களின் தந்தையாரான திரு. மோதிலால்நேருஅவர்கள் 1928-ம் ஆண்டு காங்கிரஸ்தலைவரானர். அதன்மேல் பண்டிதநேருஅவர்களே இருமுறை காங்கிரஸ்தலைவராகத் தெரியப்பெற்றார். காங்கிரஸின் 56-வதுதலைவராகவந்திருக்கும் திருமதி இந்திராகாந்தி தற்போது உத்திரப்பிரதேசத்திலுள்ள கிராமப்பகுதிகளில் பாதயாத்திரை செய்துகொண்டிருக்கிறார். அடுத்தகாங்கிரஸ் மகாசபைக்கூட்டத்துக்கு இவரேதலைமைவகிப்பார்.

### பிச்சைக்காரனு? பணக்காரனு!

லண்டன்நகரிலே வாட்டர்லூப் பாலத்தின்அடியில் ஒருபிச்சைக்காரன் கடந்தசிலவருடங்களாக உட்கார்ந்து பிச்சையெடுத்துவருகின்றன். பாலத்தைத் தாண்டிப்போகிறவர்கள் அவனுக்கு ஏதாவது பிச்சை போடாமல் அப்பாற்செல்வது கிடையாது. இந்த யாசகத்தொழிலிலே அவனுக்குத்தினமும் 5பவுண்முதல் 8பவுண்வரையிலே கிடைக்கிறது. பொழுதுபட்டதும் தினமும்அவனை ஒருகார்வந்து அழைத்துச்செல்லுகின்றது. ஒருநாள் அந்தக்காரைப் பின்தொடர்ந்துசென்ற ஓர் இரகசியப்பொலிசார், பகலிலே பிச்சையெடுக்கும் அந்தமனிதன் இரவிலேஓர் பெரியகனவானுய் ஆடம்பரமாகப்புழங்கிவருவதைக்கண்டு அவர்பெரிதும் ஆச்சரியமுற்றார். பொலிஸ்இலாகாவிடம் அவர் தெரியப்படுத்தியதும் அவனைப்போலப் பிச்சையெடுத்துப் பிழைப்பதே பெரும் உத்தியோகமென்று அவர் தலைமைப் பொலிஸ்அதிகாரியிடம்கூறினரென்றால் எவர்தான் ஆச்சரியப்படாதிருப்பார்?

* * *

● அடுத்த ஏழுவருடகாலத்துள் — அதாவது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியானதும் உணவு,கைத்தொழில் துறைகளிலே இந்தியா சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ளுமென்று இந்தியப்பிரதமர்நேரு நம்பிக்கைதெரிவித்திருக்கின்றார். உணவு உற்பத்தியின் அவசியம் இப்போது நன்குணரப்பட்டுள்ளதால் இவ்வருடவிளைவு பாராட்டக்கூடியதாயிருக்குமென்று அவர் கூறியிருக்கின்றார்.

● இந்தியாவிலே அங்கமலைஎனுமிடத்திலே முத். மாட்டீன் தேபொறெஸ்க்கு மகிமையாக ஓர் கோவில் கட்டப்பட்டுவருகிறது. இந்தியாவில் முதன்முதலாகக் கட்டப்படும் இந்தக்கோவில் தாழ்மாதுக்குச் செல்லும்வாயிலை அழகுபடுத்தும் பேரான தூண்கள், டோமங்களின் பிரதிரூபங்களுடையதாய் அமைந்திருக்கும். தாழ்மகாலைகிர்மாணிக்க ஓர்இந்தாலியகுருவானவர் உதவிசெய்தார்.

● காலஞ்சென்ற 12-ம்பத்திநாத பாப்பானவரின் வாழ்க்கைபற்றிய ஓர் சினிமாப்படத்தைத் தயாரிக்குமதிட்டம்ஒன்றுக்குத் தற்போதையபாப்பரசர் தமதுஅங்கீகாரம் அருளியிருக்கின்றார். கலிபோனியாவிலே ஷேர்மன்ஓக்ஸ் நகரில்வசிக்கும் சுதந்திர படஉற்பத்தியாளரான திரு. டான் மெறின் என்பவரால் கலர்ப்படமாக இது தயாரிக்கப்படும். காட்சிகளிற்சில வத்திக்கானிலே பிடிக்கப்படும்.

# அங்கும் இங்கும்

## காரணம் கேட்கின்றார்

"ஐக்கியதேசியகட்சி எழுந்துவிட்டதென்று பிரதமர் பண்டாரநாயகா கூறுகின்றார். அவருக்குப் பயம் கண்டுவிட்டது. அவசரகால நிலைமையின் கீழ் இறந்தவர்கள் தொகை எவ்வளவு? விசாரணை நடத்தாதது ஏன்? காரணம் கேட்கிறோம். தக்க பதிலளிக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது."

**திரு. டட்லி சேனநாயகா**
முன்னைநாள்பிரதமர்

## தமிழரும் ஒற்றுமையும்

"நாட்டின் நலனுக்காகத் தமிழர் செய்த சேவைகளையெல்லாம் மறந்துவிட்டுச் சிங்களவர்கள் இன்று இலங்கை முழுவதையும் சிங்களநாடாக்க முயல்கின்றார்கள். தமிழர் இனிமேலும் ஒற்றுமை யிழந்தவர்களாய் இருத்தல் கூடாது. அவர்கள் தங்கள் சொந்தக் கைத்தொழிற் பொருட்களையே உபயோகிக்கவேண்டும்."

**டக்றர் ஈ. எம். வி. நாகநாதன்,**
தமிழரசுக்கட்சிக் காரியதரிசி.

## தமிழரும் பசுக்காத்தலும்

"பண்டைக்காலமக்கள் தங்கள் வீடுகளில் பசுக்களை அன்பாக வளர்த்துப் போற்றிவந்தார்கள். பசுப்பால் கிடையாத வீடு அந்தக்காலத்தில் கிடையாது. தமிழ்மக்கள் விருந்தினரை அழைத்துத் தயிர், பால், நெய் ஆகியவைகளைக் கொடுத்து உபசரித்தார்கள். ஆனால், இன்று பசுக்காத்தல் சீரான முறையில் நடைபெறுவதாகத் தெரியவில்லை."

**திரு. இ. த. சுப்பிரமணியம்,**
மீசாலைக் கி. மு. சங்க போஷகர்

## கவலை தெரிவிக்கின்றார்

"சுதந்திரதினம் எல்லாஇனத்தவராலும் கொண்டாடப்படவேண்டிய ஓர் விசேஷ தினமாகும். இத்தினத்தை ஓர் துக்கதினமாக அனுட்டிக்கும்படி சமஷ்டிக்கட்சி கேட்பதிலே எவ்வித நியாயமும் இருக்கமுடியாது. மாசி 4-ந் திகதியன்று நாம் சுதந்திரம் பெற்றோம். இருந்தும் இதைத் துக்க தினமாகக் கொண்டாடும்படி சமஷ்டிக் கட்சி கோருகின்றது. இந்தக் கோரிக்கையில் நியாயமே கிடையாது."

**செனற்றர் எஸ். நடேசன்**

## அரசியலும் ஐக்கிய இயக்கமும்

"முன்னொருகாலம் ஐக்கியஇயக்கத்திற்குத் தென்கிழக்குஆசியாவில் பேர்போன நாடாக இலங்கை விளங்கியது. ஆனால், இப்பொழுது மந்திரிமார் தொடக்கம் உத்தியோகஸ்தர் ஈறுகவுள்ளபலரும் அரசியலை ஐக்கிய இயக்கத்தினுள் புகுத்தி அதனைச் சின்னாபின்னப் படுத்துகின்றனர். எந்த அரசியல்வாதியும் ஐக்கிய இயக்கத்தில் தனது சொந்த மனஸ்தாபங்களைப் புகுத்தக்கூடாது. நீதிநியாயம் படைத்த உத்தியோகஸ்தர்கள் ஐக்கிய இயக்கங்களிலே இடம்பெறவேண்டும்."

**திரு. வி. சுப்பையா,**
வடஇலங்கை ஆசிரியசங்க தலைவர்

## அதிமுக்கியமான பிரச்சினை

"இடாம்பீகவாழ்வு கொண்டுவரும் தாழ்வு" என்ற பழமொழியை நாம் சற்றே ஊன்றிச் சிந்தித்தால் அதிலே பயனுள்ள அம்சங்கள் பொதிந்துள்ளன என்பது புலனாகும். ஆடம்பர வாழ்க்கை நடாத்துவதினாலேயே மக்களின் வாழ்க்கை பிற்போக்கு அடைகின்றது. நடமை தின்மை சம்பந்தமான கொண்டாட்டங்களைச் சிக்கனமானமுறையில் நடத்துவதினாலும் மக்கள் பொருளாதாரவிடுதலை பெறமுடியும். இன்று மக்களுக்கேற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளில் அதிமுக்கியம்வாய்ந்தது பொருளாதாரப் பிரச்சினையாகும்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

## உதவிமந்திரி சொல்லுகிறார்

"எம். ஈ. பி. அரசாங்கம் பெயரளவில்தான் மக்கள்அரசாங்கமாய் இருக்கிறது. உண்மையைக் கூறுகிறேன். எம். ஈ. பி. அரசாங்கம் உண்மையான மக்கள் அரசாங்கமல்ல. அது ஒரு போலி அரசாங்கம். நான் எம். ஈ. பி. அரசாங்கத்தில் ஓர் உதவிமந்திரி பதவி வகித்தபோதிலும் எனது மனச்சாட்சிக்கு விரோதமாக எம். ஈ. பி. தலைவர்களின் முதுகுகளைச் சொறிய நான் தயாராயில்லை."

**திரு. லக்ஸ்மன் இராசபக்ஸ,**
உதவி வர்த்தக மந்திரி

## பஞ்சம்பிணியைப் போக்க....

"நாளுக்குநாள் சனத்தொகை பெருகிக்கொண்டே வருகிறது. பொருள் அபிவிருத்தி குறைந்து கொண்டு போகிறது. அதனால் பஞ்சம், பிணி ஆதியன நம்மை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றைப் போக்கவேண்டுமானால் அதிகமான பயிர்உற்பத்தி செய்யவேண்டும். ஜப்பானைப் பின்பற்றி உணவுப்பொருள் விருத்தியுறச்செய்வீர்களாயின் பெரும் பயன் அடைவீர்கள்."

**திரு. வி. வேலுப்பிள்ளை,**
உணவுஉற்பத்தி மேற்பார்வையாளர்

## வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை

"யூ. என். பி. அரசாங்கம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறியதால் அதனை எதிர்த்தோருடன் நாமும்சேர்ந்தோம். ஆனால், எம். ஈ. பி. ஆட்சிப்பீடத்துக்கு வந்தபின் துரதிர்ஷ்டவசமாக அது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதை முன்னிட்டு அக்கட்சியிலிருந்து நான் விலகி உண்மையான மக்கள் அரசாங்கத்தை நிறுவுவதற்கான போராட்டத்தில் இறங்கியுள்ளேன்."

**திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈறியகொல்லை,**
தண்டகமுவா எம். பி.

## இருள்சூழ்ந்த எதிர்காலம்

"சகல துறைகளிலும் தமிழ்மக்கள் முன்னேறுவதற்குப் பொருளாதாரப் பிரச்சினை ஓர் சாபக்கேடாக இருக்கிறது. இந்தப்பிரச்சினையினால் அரசியல் விடுதலைதானும் பெறமுடியாமல் இருக்கிறது. ஆகவே, ஒவ்வோர்நிமிஷத்தையும் உபயோகமானவழிகளில் செலவு செய்யும்படியும், கிருஷிகத்திலும், குடிசைக் கைத்தொழிலிலும் ஈடுபடும்படியும் மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எதிர்காலம் தமிழ் பேசும் மக்களுக்கு இருள்சூழ்ந்ததாக இருக்கிறது. ஆகவே, விழிப்புடனிருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

## எச்சரிக்கையாக இருக்கட்டும்

"இந்நாட்டிலே இனிமேல் வகுப்புக் கலவரம் ஒன்று ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. வகுப்புக்கலவரத்தைக்கிளப்பிப் புரட்சியொன்றை நடத்த முயற்சிக்கும் எந்தச்சக்திக்கும் இனிமேல் நாம இடங்கொடுக்கப்போவதில்லை. குழப்பத்தை உண்டுபண்ண விரும்புகிறவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். சென்ற வைகாசி, ஆனி மாதங்களில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்கள் போன்றவைகளை இனிமேலும் இந்நாட்டில் நாம் அனுமதிக்கமாட்டோம். நாட்டுமக்களைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமையும், பெரும் பொறுப்புமாகும். எல்லா மக்களுக்கும் பாதுகாப்பளிக்க வேண்டுமென்பதையிட்டுத்தான் நாம் அவசரகாலநிலைமையை நடைமுறையில் வைத்திருக்கிறோம்."

**பிரதமர் பண்டாரநாயகா**

# தமிழ்த்தொண்டு புரிந்த இரு கத்தோலிக்க குரவர்களின் நினைவு விழா

தமிழர் அறநெறிக் கழகத்தால் இரண்டாவதுமுறையாக "வீரமாமுனிவர்," "ஞானப்பிரகாசர்" ஆகியோருக்குப் பரிசுத்தஅடைக்கலநாயகி கலாசாலைமண்டபத்திலே விழாவெடுக்கப்பட்டபோது கழகதலைவர் வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைசுவாமியவர்கள் தமது ஆரம்பவுரையிலே, "இக்கழகம் மூன்று ஆண்டுகளாக அறத்தோடு தமிழ்ப்பெரியார்களுக்குவிழாவெடுத்துத் தமிழைப் பேணிவருகின்றது; இன்றுகழகம் வீரமாமுனிவர், வண. சுவாமிஞானப்பிரகாசர் ஆகியோர்க்கு இரண்டாவதுமுறையாக விழாவெடுத்தது போற்றற்குரியதாகும்; இக்கழகத்திற்கு வேண்டியஉதவிபுரிய நானெப்போதும் முன்னிற்பேன்" என்றார்.

தொடர்ந்து வண. ஜே. பி. தேவராசா சுவாமியவர்கள் பேசியபோது, "இக்கழகம் தமிழைவளர்ப்பதோடு மாத்திரம்நின்றுவிடாது, முன்னேற்ற முயற்சிகள்பல செய்யவேண்டும்; அத்தோடு வீரமாமுனிவர், ஞானப்பிரகாசர்ஆகியாம் கத்தோலிக்க தமிழ்த்தொண்டர்களைப்போன்று முன்னேறித் தமிழைவளர்க்கவேண்டு"மெனக் கூறிக் கழகத்தின்வளர்ச்சியை ஆசித்து நின்றார்.

கழகதலைவர் யோ. சபாநாதன் அவர்கள் பேச்சாளரையும், ஏனையோரையும் வரவேற்றுப்பேசுகையில், "தமிழ்வளர இக்கழகம் தன்னாலானதொண்டினை ஆற்றிவரும்; இது அறத்தை அடிப்படையாகக்கொண்டு இயங்குவதால் எதிலும் தோல்வி அடையாது; எனவே, கழகத்துக்கு ஊக்கமளிக்குமாறு" அனைவரையும் வேண்டினார்.

தலைமையுரையிலே கழகஉபதலைவரான ஆசிரியர் ம. விக்ரர் அவர்கள் "சுவாமிஞானப்பிரகாசர்அவர்கள் பலமொழிகளில் பாண்டித்தியம்உடையவர்; அவர்பலமொழிகளை ஆராய்ச்சிகள் செய்து, அவைகளிலெல்லாம் தமிழே முதன்மையும், சிறப்பும் வாய்ந்ததென்றுவிளக்கிக்காட்டித்தமிழர்க்கும், தமிழுக்கும் பலவழிகளாலும் தொண்டு செய்தவர்;

"வீரமாமுனிவர் பிறநாட்டவராயினும் தமிழ்மொழியைக் கற்றுத்தேறித் "தேம்பாவணி" அதாவது, வாடாதமாலையென்ற காப்பியத்தைத் தமிழிலே ஆக்கித்தந்தவர்; தமிழ்இனிமைசொட்டும சொல்லடுக்குள்ள கவிதைகளும், கட்டுரைகளும் ஆக்கியவர்; அநேகதமிழ்நூல்களை இயற்றியவர்; இத்தகையபெரியோர்களை நினைவில்கொண்டு இக்கழகம் அவர்களுக்கு விழாவெடுத்தது சிறந்தது; இதன் அழைப்பை நான் அலட்சியஞ்செய்யமுடியாது; எந்தஅவசியவேலை இருந்தபோதிலும் கழகத்தின் செயல்முறைகளில்பங்குகொள்ள நான் என்றும் தயார்" என்றார்.

பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாசம் அவர்கள் பேசுகையில், 'தமிழ்த்தொண்டர்'களின் பெருமைகளை அழகாகஎடுத்துக்காட்டி நகைச்சுவையோடு பேசினார்.

ஆசிரியர் ரி. எம். அம்புறோஸ்அவர்கள் வீரமாமுனிவர், ஞானப்பிரகாசர் ஆகியோரின் சிறப்புகளையும், தொண்டுகளையும் விரிவாக நல்லமுறையில் எடுத்துக்கூறினார்.

அடுத்தபடியாக, "பெண்கள் முன்னேற வேண்டும்" என்றவிஷயமாய் ஆர்வத்தோடு ஆசிரியை பாக்கியம் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் பேசினார்.

அடுத்துத் திரு. அ. இ. வேதநாயகம்அவர்கள் பேசுகையில் "தமிழ்ப்பெரும்புலவர்கள் எண்ணிறந்தோர் இருப்பினும் இத்தாலியநாட்டிலிருந்து வந்தஅந்நியர் தமிழைவளர்த்தது பெருமையினும்பெருமை; தமிழில் இல்லாத கலைகள் இல்லை; அதனை உணர்ந்தவர்களில்ஒருவர் வீரமாமுனிவர்" என்றார்.

இன்னும்ஆசிரியர் எஸ். ஏ. தருமலிங்கம்பேசுகையில், "தமிழின் இனிமையே அயல்நாட்டவரைக் கவர்ந்தது" என்றார்.

செல்வி மேரிகொன்ஸ்ரன், செல்வன் கு. கந்தசாமி, செல்வன் எவ் எம். இராசுஆகியோர் வீரமாமுனிவர், ஞானப்பிரகாசர் ஆகியோர்பற்றி இயற்றிய இன்னிசைக்கீதங்களைப்பாடி மக்களைமகிழ்வித்தார்கள்.

ஈற்றில், கழகச்செயலாளர் எழுந்து விழாவினைச்சிறப்பித்த பிதாக்களின் சேவை போற்றத்தக்கது; தமிழ்த்தொண்டுபுரிய அவர்கள்தரும்ஆயராஊக்கம் எமதுகழகத்தை வளர்ச்சியுறச்செய்யுமென்றுகூறிச் சமுகமளித்தமக்களுக்கும், மாணவமாணவிகளுக்கும் நன்றிதெரிவித்துநின்றார்.

---

## தமிழ்மக்களின் வருங்காலம்

"தமிழ் மக்களின் வருங்காலமும், அவர்கள் உய்வதற்கான வழியும் இனிமேல் அவர்களின்கையைப் பொறுத்ததனவேயன்றி வேறுஎவரிடமிருந்தும், வேறு எப்பகுதிகளிலுமிருந்தும் எவ்விதஉதவியும் கிடைக்குமென எதிர்பார்ப்பது பயனற்றது. தமிழர்கள் தங்கள் பூர்வீகப் பகுதிகளுக்குத் திரும்பிவந்து கமத்தொழிலில் ஈடுபடுவதே சாலச்சிறந்தது. கமத்தொழிலும், குடிசைக் கைத்தொழிலும்தான் இனி வருங்காலத்தில் தமிழருக்குள்ள ஒரே நம்பிக்கையாகும்."

**திரு. வி. என். நவரத்தினம்,**
சாவகச்சேரி எம். பி.

## சவால் விடுக்கின்றார்

"அரசாங்க கட்சியானது ஆட்சிபுரியப் போதிய பலமுள்ளதாய் இருக்கிறதெனப் பிரதமர் பண்டாரநாயகா தேசிய வானொலிமூலம் தவறாமல் நமக்குச் சொல்லிக்கொண்டு வருகிறார். ஆனால், கொழும்பிலே நகரசபைத் தேர்தலை நடத்தித் தமது கட்சியின் பலத்தைப் பரீட்சிக்குமாறு நான் பிரதமருக்குச் சவால் விடுகின்றேன். தனது கட்சியின்பலம் மாகாணங்களிலுள்ள கிராமப்பகுதிகளில்தான் தங்கியிருக்கிறதெனப் பிரதமர் துணிந்து கூறுவாரேயானால், அல்லது அப்படிக் கருதவேண்டுமெனப் பாமர மக்களை எதிர்பார்ப்பாரேயானால் கலவிவாத் தொகுதியில் ஓர்உபதேர்தலை நடத்துமாறு நான் பிரதமருக்குச் சவால்விட்டிருக்கிறேன்."

**திரு. டட்லி சேனநாயகா,**
முன்னைநாள் பிரதமர்

---

● கெடுபிடியுத்தத்தைத் தவிர்க்க ருஷியாதெரிவிக்கும ஒவ்வோர்யோசனையும் மேற்குநாடுகளின் கம்யூனிஸ்தஎதிர்ப்பைக் குறைக்கமுயல்வதாய் இருக்கிறதென்றும், ஜேர்மனியை ஒன்றுபடுத்துவதற்கு மாறானகருத்தையே இப்போதுருஷியா கொண்டிருக்கிறதென்றும் அமெரிக்க வெளிநாட்டு மந்திரியான திரு. டல்லஸ் தெரிவிக்கின்றார்.

● 23-ம் அருளப்ப பாப்பரசரது ஆளுகையின் முதலாவது தபால்முத்திரைகளுக்கு, ஆடர்களுடன் பணம் அனுப்புவதை நிறுத்திவிட வேண்டுமென்று வத்திக்கான் தபாற்கந்தோர் முத்திரைகள் சேகரிப்பாளரையெல்லாம் கேட்டிருக்கிறது. மாசிவரையிலே முத்திரைகள் விடுக்கப்படமாட்டாவென்றும், அதற்குமுன் ஆடர்கள் ஏற்கப்படமாட்டாவென்றும் அறிவித்திருக்கிறது.



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

எங்கள் நெற்றியில் பரிசுத்த சாம்பல் பூசித் தபசுகாலத்தை ஆரம்பித்திருக்கிறோம். எமது ஆண்டவர் கானகத்தில் நாற்பது நாள்களாகப் புரிந்த கடுந்தவத்தை ஞாபகப்படுத்தி அவரைப் பின் பற்றுகிறோம்.

நாம் போரில் ஈடுபட்டிருக்கிறோம். எமது சத்துராதிகள் உலகமும் உடலும், நரக அலகையும். தியாகமும் துன்பமும், எம் போராயுதங்கள். இவைகளால் நாம் வெற்றியீட்டுவது நிச்சயம், கிறிஸ்துவின் உத்தானத்தைப் போன்று.

தபசுகாலத்தின் அச்சாணி தியாகம். நாமும் தியாகஞ் செய்ய வேண்டும்.

என்ன செய்யலாம்? அரைமணி நித்திரைத் தியாகஞ் செய்யலாம் — பூசைப்பலிக்குச் சமுகங் கொடுப்பதற்காக. இடைநேரச் சிறு உணவைத் தியாகஞ் செய்யலாம் — தருமங்கொடுப்பதற்காக. பங்குகளில் நடக்கும் தபசுகால ஞானஒடுக்கங்களில் பங்குபற்றலாம்— ஞானவாழ்க்கையை வளப்படுத்துவதற்காக. ஓய்வுநேரத்தில் கொஞ்சத்தைத் தியாகஞ் செய்யலாம் — நற்கருணை சந்திப்பதற்காக, அல்லது சிலுவைப்பாதை தியானிப்பதற்காக. சகோதரர் மனதைப் புண்படுத்தும் பேச்சைத் தியாகஞ் செய்யலாம் ; சிறுவருக்கோ, வயோதிபருக்கோ குற்றேவல் புரியலாம்—சகோதர அன்பில் வளர்வதற்காக.

எதைச் செய்யத் தீர்மானித்தாலும், அமைதியுடனும், உதார குணத்துடனும் அதை அடிக்கடி செய்யுங்கள்.

தபசுகால முடிவு நீங்கள் எவ்வளவு சுய ஆட்சி உள்ளவர்கள் எனவும், இரட்சகர் சிலுவையில் செய்த உயிர்த்தியாகத்தை எவ்வளவு மதிக்கிறீர்கள், ஆசிக்கிறீர்கள் எனவும் காட்டும்.

அண்ணா.

—*—

## உமது இரத்தத்தை நாய்கள் நக்கும்

— ஜி. ஜே. பிள்ளை —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இது அவருக்கு, போர்முனையிலே ஒரு யுத்தவீரன் அடையும் வெற்றியின் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அப்போது ஆலயம் எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது.

ஆலயத்தின்மோனநிலையைக்கிழித்துக் கொண்டு ஒரு மெல்லிய குரல் வெளியே வந்தது. அது அச்சந்நியாச மடத்தைச் சேர்ந்த இன்னோர் சகோதர சந்நியாசி எல்ஸ்ரோவ் என்பவரின் குரல். மெல்ல எழுந்து பிரசங்கக் கூடத்தின் முன்பாக, ஆலய மத்தியில் போய் நின்றார். அவர் கூறினார்: "ஐயா பிரசங்கியாரே! உங்கள் தாக்குதலுக்கு ஆளான குருபீற்றோ இங்கே இல்லை என்பது தாங்கள் அறிந்ததே. அவர் கன்ரர்பறி ஆலயத்தில் நடக்க இருக்கும் ஓர் ஆலோசனைக் கூட்டத்துக்குச் சமுகமாகச் சென்று விட்டார், நீங்கள் எண்ணுவதுபோல. அவர் தங்களுக்கு அஞ்சி இவ்விடத்தை விட்டு ஓடிவிடவில்லை, அவர் கட்டாயம் நாளை வருவார்."

கார்வினுக்குச் சினம் மூண்டது. ஆத்திரத்தில்உடல்பதறியது. எல்ஸ்ரோவ் தொடர்ந்து கூறினார்: "நான் இங்கே நிற்கின்றேன் இன்னொரு மிக்கேயா. இன்னொரு தீர்க்கதரிசி. பீற்றோ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் சரியானது, உண்மையானது. விசுவாச சத்தியத்துக்குப் பொருத்தமானது. பரிசுத்த வேதாகமத்தின் பேரால் நான் நீர் கூறியவற்றை மறுக்கின்றேன். பரிசுத்த வேதாகமத்தின் போதனைகள் உண்மையானவை என்பதை அத்தாட்சிப்படுத்த நான் இவ்விடத்தில் உயிரை இழக்கவும் ஆயத்தமாக இருக்கின்றேன்."

இவ்வார்த்தைகள் எல்ஸ்ரோவின் வாயினின்றும் வெளிவந்ததுதான் தாமதம். அவரைத் தாக்கப் பலாத்காரக் கரங்கள் சில ஓங்கின. பயங்கரக்குரல்கள் அங்குமிங்குமாகக் கேட்டன.

எனினும் எல்ஸ்ரோவ் வாதப்பிரதிவாதங்களின் எல்லையைக் கடந்தவராக, ஏதோ தன்னை அறியாத ஒரு சக்தியினால் ஆட்கொள்ளப்பட்டவராகக் காணப்பட்டார். அவர் கண்களிலே தெளிவின் பிரகாசம் ஜொலித்தது. மனதிலே ஒரு துணிவு பிறந்தது.

"கார்வின் அவர்களே! தாங்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளில் ஒருவர். விபசாரத்தின்மூலம் அரசனுக்கு ஒரு வாரிசு கிடைக்க வேண்டும் என்பதை ஆதரிக்கின்றீர்கள். அரசனை எதிர்நோக்கியுள்ள அழிவுச் சின்னங்களை மறைத்து, அவனைக் கேட்டின் பாதையில் அழைத்துச் செல்கின்றீர்கள்." இந்தக் கடூர வார்த்தைகள் எல்ஸ்ரோவிடமிருந்து எக்காளத் தொனிபோல் எழுந்தன. அலையலையாக எழுந்து, சுருண்டு, மோதி மீண்டும், மீண்டும் எதிரொலித்தன. இவை கார்வினுடைய செவிகளில் நாராசம்போல் பாய்ந்தன. அவரது உள்ளத்திலே ஒரு கலக்கம். உடம்பிலே ஒரு தளர்ச்சி. அவர் ஏதோ கூற எழுந்தார்.

ஆனால், அவர் எதுவும் கூறுமுன் எட்டாம் என்றியே தனது இடத்தில் இருந்து, எழுந்தான். விவாதத்தை நிறுத்தும்படியாகத் தனது கெம்பீரத் தொனியிலே ஆணையிட்டான். கூட்டம் கலைந்தது. அரசனும் தனது அரண்மனையை அடைந்தான். ஆத்திரம் அவனை ஆட்கொண்டிருந்தது.

பீற்றோ, எல்ஸ்ரோவ் இருவரும்கைதிகளாக்கப்பட்டு அரச விசாரணைக் குழுமுன் நிறுத்தப்பட்டனர். இருவரையும்சாக்கிற்கட்டித்தெம்ஸ் நதியில் எறியும்படியாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. கிறீனிச்சில் உள்ள சந்நியாசமடம் தரைமட்டமாக்கப்பட்டது. இது நடந்து ஒருவருடத்துக்குள்ளாக, எட்டாவது என்றி றோமைத் திருச்சபையோடு தனக்கிருந்த தொடர்பை அறுத்துக் கொண்டான். இங்கிலாந்துத் திருச்சபைக்கு, ஏக அதிபதியாக என்றி தன்னையே பிரகடனம் செய்து கொண்டான்

"இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவன் எட்டாவது என்றியே" என விசுவாசப்பிரமாணம் எடுத்துக் கொள்ள மறுத்தோரின் தலைகள் தரையில் போர்த்தேங்காய்கள் போல் உருண்டன. இக்கதிக்குள்ளானோருள் அதிமேற்றிராணியார் பிஷரும், இங்கிலாந்தின் முதலமைச்சர் சேர் தொமஸ்மூரும் பிரதானமானவர்கள்.

என்றி இறந்தபோது அவனுக்கு முன்னே அவனது மனைவியர் நால்வர் இறந்திருந்தனர். யாரின் பொருட்டுக் கத்தரீனை விவாகரத்துக் கோரினானோ, யார் பொருட்டு, உரோமைத் திருச்சபையை உதாசீனம் செய்தானோ, அவள் அதாவது, ஆன்பொலீன் துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டாள். முள்ளில்லா றோசா என்று எட்டாவது என்றியால் பாராட்டப்பட்ட, கத்தரீன் காவேட்டுக்கும், என்றியின் இன்னோர் மனைவிக்கும் இதேகதிதான் நேர்ந்தது. அராகன் நாட்டுக்கன்னி என வருணிக்கப்பட்ட கத்தரீனுடையமுடிவும் வேறாகஇருக்கமுடியவில்லை. முடிக்குரிய வாரிசு எட்வேட்டை ஈன்ற ஜேன் சேய்மர் என்ற பெண்ணும் பெற்றபரிசு இதுதான்.

எட்டாவது என்றி வெஸ்மினிஸ்ரரில் இறந்தபின் அவனது சடலம் "சம்ரன்கோட்" என்ற இடத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது. வழியில் அப்பிரேதம் ஐல்வேர்த்தில் உள்ள சியோன்எனும் சந்நியாசமடத்தில் ஓர்இரவு தங்கவேண்டி ஏற்பட்டது.

எட்டாவது என்றியின் மனைவி கத்தரீன் காவேட்சிரத்சேதம் செய்யப்படுமுன் இங்கேதான் சிறையிடப்பட்டிருந்தாள் என்பதும், அவனது இன்னொரு மனைவி, கென்ற்நாட்டின், புனிதகன்னி எனப்புகழப்பட்டவள் ஈவான் எலிசபேர்த் பேற்றன் இவ்வாச்சிரமச் சுவர்களுள்ளே பூட்டப்பட்டுத் தனது மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள் என்பதும் ஈண்டுகுறிப்பிடவேண்டியது.

என்றியால் முன்பு தூக்கிலிடப்பட்ட, அன்றேல் சிரச்சேதம் செய்யப்பட்ட பலருக்கு அந்தியகாலப் புகலிடமாயிருந்த இந்த ஆச்சிரமத்தில் என்றியின் சடலம் ஓரிரவாவது தங்குவது பொருத்தமானதே!

வீங்கி உப்பினதாய், துர்நாற்றம் வீசுவதாய், பிரேதப்பெட்டியுள் வைக்கப்பட்டிருந்த என்றியின்சடலம் அன்றிரவு அவ்வாச்சிரம அறையொன்றில் வைக்கப்பட்டிருந்தது. சாமவேளை பிரேதப்பெட்டி வெடித்துத் திறந்தது. இரத்தமும் மாமிசத் துண்டங்களும் எங்கும் சிதறின. நாய்கள் அவற்றை நக்கின.

பீற்றோவின் தீர்க்கதரிசனம் நிறைவேற இதிலும் பொருத்தமான இடம் வேறு இருக்கமுடியாது.

## பரலோக ஏணி

கிறீஸ்துவர்களாகியநாம்மோட்சம் செல்வதற்குஏணியாகவுள்ளதுசெபமாலை. இதனாலன்றோ அடிக்கடி செபமாலை ஓதும்படியாகத் தேவதாயார் பலகாட்சிகளில் கூறியுள்ளார்.

செபமாலை ஓதுபவர்களின்பீது தேவதாயார் அன்புமழை பொழிகிறார். அதுமட்டும் அல்லாமல் எமக்கு வேண்டிய சகலநன்மைகளையும் திருக்குமாரனிடம் பெற்றுத் தந்தருளுகிறார். மோட்ச முடியையும் அளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறார்.

ஆகையால், கிறீஸ்துவ பெருமக்களே, இவ்விதநன்மைகளை அடைவதோடு மோட்சபேரின்ப பாக்கியத்தையும் அடையவேண்டுமாயின் செபமாலையை அடிக்கடி ஓதுங்கள். அதிகம்ஓதுவதால் மோட்சம் செல்ல வேண்டிய ஏணியைப் பெற்றுக் கொள்ளுவீர்கள். ஆகையால், நேரத்தை வீணாக்காதேயுங்கள்.

எமது வாழ்க்கையில் எவ்வளவோ நேரத்தை வீணாகச் சிதறடிக்கிறோம்.

ஆகையால், அந்நேரத்தை வீணாக்காது அந்நேரத்தில் செபமாலைஓதுவது எவ்வளவோ உத்தமம். இங்ஙனம் சிறுவர்தொட்டு, பெரியோர் வரை செபமாலையை ஓதி மோட்ச பாக்கியத்தை அடைய வேண்டிய ஏணியில் ஏறுவோமாக.

செபமாலையை ஓதிப் பரலோகத்தை நாடுவோமாக.

கே. எஸ். மாலை.

## மோனத்தைக் கலைத்தவர்

உகண்டாப் பகுதியில் உள்ள கபாலேயில் நடந்த மூத்தினா அந்தரங்க தியானகாலத்தில் இளம் பெண் ஒருத்திக்குக் குழந்தை ஒன்று பிறந்தது. தாயும், சேயும் சேமமே இருக்கின்றனர்.

ஆயினும், தியான இயக்குனரான மரியாயின்சேனை உறுப்பினர் தியானத்தில் நிலவிய கண்டிப்பான மௌனத்தைக் குழந்தை குலைத்துவிட்டதெனக் கவலைப்பட்டனர்.

1000க்கு மேற்பட்ட ஆண், பெண், பாலரும் கலந்து கொண்ட இத்தியான முயற்சிகளுக்கு 20மைலுக்கப்பாலிருந்தும், கால்நடையாய்க் கிறிஸ்துவர்கள் வந்தனர்.

சமையற் பாத்திரங்கள் குருமனைக்கு முன்கூட்டியே அனுப்பப்பெற்றிருந்தன. குருமனையில் மாவும், வத்தாளைக்கிழங்கும், பருப்புவகைகளும், வாழைப்பழமும் நிரம்ப இருந்தன.

● இத்தாலிய கத்தோலிக்கசேவா இயக்கம் தற்போது 32,11,000 அங்கத்தினர்களைக் கொண்டிருக்கிறது. இதிலே பிள்ளைகளின் ஸ்தாபனம் 12,25,000 பேரைக் கொண்டிருக்கிறது. சர்வகலாசாலை மாணவர்களாய் 3,621 பேரும், மாணவிகளாய் 2,854 பேரும் இருந்துவருகின்றார்கள்.

● சந்திரமண்டலத்தைக் கடந்து போய்ச் சூரியனைச்சுற்றிவரக் கூடிய றொக்கெற்றொன்றை இம்மாதம்26-ந் திகதி அனுப்பிவைக்க அமெரிக்க வான வெளிஆராய்ச்சி ஸ்தாபனம் திட்டமிட்டிருப்பதாய் வாஷிங்ரன் நகரிலிருந்து சென்ற27-ந்திகதி யன்று செய்தி கிடைத்திருக்கிறது.

## COURT AUCTION SALE

In the District Court of Jaffna

Lalithambal daughter of Ponnampalam Nadarajah Minor, appearing by her father and next friend Ponnampalam Nadarajah both of Vannarponnai West, Jaffna.

Plaintiff.

Vs.

Case No. P./114

1. Kanagasabai Marcandu and wife.
2. Sivalogalakshmi both of Vannarponnai West, Jaffna.
3. Appakuddy Kumarasamy.
4. Sivagurunathan Rajendra both of Manipay South.
5. Kandavanam Ponnampalam of Vannarponnai West, Jaffna.

By virtue of directions received by me from the District Court of Jaffna in Partition Case No. P/114 of the said Court I will put up for sale by public auction at the spot on the 21st Day of February (Saturday) commencing at 2-30 p. m. the undermentioned property :—

The schedule of Property referred to above all that piece of land situated at Vannarponnai South West in the parish of Vannarponnai, of the Division and District of Jaffna, Northern Province called "Usantharai" in extent, 4 Lachchams V. C. and 16 Kulies with house, well and cultivated and spontaneous plantations and bounded on the East :—By Manipay Road, and bounded on the North :—By Lane, and bounded on the West :—By the property of Tharmalingam and shareholders, and bounded on the South :— By the property of Somu Ramalingam and shareholders, and described in Survey Plan No. 1941 dated 14th October 1957 by T. A. Lazarus, (Thampoe) Licensed Surveyor and Court Commissioner of "Bethany" Russell Square, Jaffna.

(Sgd.) A. Lazarus Thampoe,
Licensed Surveyor and
Court Commissioner.

"Bethany"
Russel Square,
Jaffna, 2-2-59.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் அனுக்கிரகத்தினுலும், பரிசுத்த சதாசகாயமாதா, எங்கள் ஊரின் பாதுகாவலரான அர்ச். நீக்கொலாவுமுனீந்திரன், அர்ச். செபஸ்தியார், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். றீத்தம்மாள் இவர்களின் விசேஷ மன்ருட்டினுலும் எனக்கும், எனது மகளுக்கும்வந்த வருத்தங்கள்நீங்கிக் குணமடைந்தோம். இவர்களின்நாமம் புகழப்படுவதாக! எங்கள் பேரப்பிள்ளைக்கு உண்டாயிருக்கும்நோய்கள் குணமாகும்படியாகவும் இவர்களை வேண்டுகின்ருேம்.

மிருசுவில் ஆர். எல்.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரே! உமதுஇரக்கத்தினுல் யான்உத்தியோகஉயர்வு பெற்றமையால் எனதுநன்றி உரித்தாகுக. உமதுநாமம் எங்கும்புகழப்படுவதாக.

ஏ. ஆர். கே.

* * *

பரோபகார இராக்கினியே! பரிசுத்த சதாசகாயமாதாவே! உமது இரக்கத்தினுல் யான்உத்தியோகஉயர்வு பெற்றேன். எனதுநன்றி உரித்தாகுக. உமது நாமம் எங்கும் புகழப்படுவதாக.

ஏ. ஆர். கே.

* * *

## நேர்த்தியின் பூர்த்தி

கடந்த 30வருடகாலமாகக் கடினவியாதியினுல் கஷ்டப்பட்டுக் கடைசியாகப் பரிசுத்த 12-ம்பத்திநாத பாப்பரசரை இரந்து மன்ருடியதன்மேல் ஒருவாரத்துக்குள் குணமடையலாயினேன். நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

எம். ஏ. ரேச்

பள்ளிமுனை

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

பிரிவிடுதல் வழக்குஇலக்கம் P. 114

வண்ணர்பண்ணை மேற்கு
பொன்னம்பலம் நடராசாவும்,
மகள் லலிதம்பாள் (Minor)
பொன்னம்பலம் நடராசாவும்
(next friend) வழக்காளிகள்.

எதிராக

வண்ணர்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்
1. கனகசபை மார்க்கண்டுவும்,
2. பெண் சிவலோகலக்ஷிமியும்.

மானிப்பாய் தெற்கு
3. அப்புக்குட்டி குமாரசாமியும்,
4. சிவகுருநாதன் இராசேந்திராவும்.

வண்ணர்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம்
5 கந்தவனம் பொன்னம்பலமும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் P. 114-ம் இலக்க பிரிவிடுதல்வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1959-ம் ஆண்டு மாசிமாதம் 21-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணர்பண்ணை தென்மேற்குஇறை "உசன்தரை" எனும்காணி, பர. நில. இலா. 4 குளி 16-உம், செய்பயிர், வான்பயிர்களும், கல்வீடும், கிணறும். எல்லை: கிழக்கு — மானிப்பாய் றேட்டு. வடக்கு — ஒழுங்கை. மேற்கு — தருமலிங்கமும், பங்காளரின் ஆதனமும். தெற்கு — சோமு இராமலிங்கமும், பங்காளரின் ஆதனமும். இவ்வாதனம் A. லாசறஸ் (தம்பு) உலாந்தா மேன்தரால் 1957-ம்ஆண்டு ஐப்பசி மாதம் 14-ந் திகதி பிரதாரிக்கப்பட்ட படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

A. Lazarus Thampoe,
Licensed Surveyor, & Leveller,
and
Court Commissioner.

"Bethany"
Russell Square,
JAFFNA.
2-2-1959.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1939

யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம்
கந்தையா — வழக்காளி.

யாழ்ப்பாணம் நாவாந்துறை
1. சவிரிமுத்து பாவிலு
கைம்பெண் நீக்கிலால்
2. சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை
3 பெண் சலோமை
4. மாரிமுத்து ராஜசிங்கம்
நவரத்தினம் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 1939-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1959-ம்ஆண்டு பங்குனிமாதம் 19-ந் திகதி (19-3-59) வியாழக்கிழமை பிற்பகல் அந்தக்காணிக்குள்நின்று என்னல் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,903. இதில்ரூபா2,500-க்குப் 14-11-57 தொடக்கம், 14-2-58வரைக்கும் 100-க்குப் 18வீதவட்டியும், பின் தீர்வைக்கூட்டுத்தொகையில் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 233ரூபா 12சதமும். இதில் ரூபா 100 கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணர்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணர்பண்ணை தென்மேற்கு இறை நாவலடியும், மறுபிரிவுகளும். பர. நில. இலா. 2-உம், கல்வீட்டின் அத்திவாரமும், வீடும், தலைவாசலும், செய்பயிர், வான்பயிர்களும், கிண


### நோய்களின் விபரம்

நீரிழிவு, சன்னி, தொய்வு, இஸ்றேதியர்வாய்வு, காசம், குன்மம், காயாசுவாதம், உருக்குநோய், புற்றுநோய், கெற்பச்சிதைவினல் ஏற்படும்ரோகங்கள் முதலியனவற்றிற்குச் சிகிச்சை பெற எம்மிடம் கலந்து ஆலோசியுங்கள்.

உங்கள் சுகவாழ்வே
எமது சேவையின் இலட்சியம்.





## மூன்ரும் வருட மரண ஞாபகம்



"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்தில் மறவாதீர்."

பிறப்பு: 22-7-88 இறப்பு: 18-2-56

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை அவர்கள் இவ்வுலகைநீத்த மூன்ரும்வருடம் இம்மாதம் 18-ந்திகதி புதன்கிழமை பூர்த்தியாவதால், அன்றுதினம் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலிலும், நாரந்தனை அர்ச். சம்பேதுருவானவர் ஆலயத்திலும் துக்கப் பாடற்பூசைகள் நிறைவேறும்.

இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், உறவினர், சிநேகிதர்களும், ஏனையோரும் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷவிதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேம்.

நேசபத்தாவை இழந்துதுன்புறும்
லூர்துமரி — பிரான்சிஸ்பிள்ளை

அருமைத் தந்தையைஇழந்து துன்புறும்
பிள்ளைகள்:

சங். சிஸ்றர் மேரி பிறசன்ரேசன்
(திருக்குடும்பமடம், அனுராதபுரம்)

சங். சிஸ்றர் குழந்தையேசுவின் மேரிகலிஸ்ரா
(கார்மேல்மடம், மட்டக்களப்பு)

றும். எல்லை: கிழக்கு — பிலிப்பு மரியாம்பிள்ளை பெண் றோசம்மாவுக்கும், வயித்தி பெண் தொம்மையின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்கும் உரியஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — மரியாம்பிள்ளை பெண் சலோமையின் ஆதனம். தெற்கு — வயித்தி அதிரியாணுக்கும், சகோதரனுக்கும், மனுவல் பெண் செல்லாச்சிக்கும், சகோதரர்களுக்கும் உரியஆதனம். இதுஅடாதகலில் சொரியலாய் $\frac{2}{3}$பங்கு. முற்பதிவு D178|269.

தா. செல்லையா,
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 9-2-59.

## மூப்பர் திமிங்குமுத்து நட்சத்திரம் அவர்களின் மறைவு

காவலூர், உதயவாசரும், மூப்பர் திமிங்குமுத்து அவர்களின் நான்காம் புத்திரனும், ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் ஆலயமூப்பரும், பிரசித்தம் வாய்ந்த தண்டல்மாலுமியும், பரம்பரைத் தனவந்தருமான உயர்திரு. திமிங்குமுத்து நட்சத்திரம் அவர்கள், வயோதிப நோய்வாய்ப்பட்டு, அந்திம தேவதிரவிய அனுமானங்கள் யாவும் நல்லறிவோடே குறைவறப் பெற்று, மனைவிமக்களோடு இனசனர் யாபேரும் தேம்பிநிற்க, தமது 81-ம் வயதில், தைமாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் தனது ஆன்மாவைப் படைத்தோன் கரத்தில் ஒப்படைத்து நித்திய நித்திரையாயினர். இவரது மரணச் செய்தியை ஊர்காவற்றுறை நகரெங்கும் அறிவிப்பான்வேண்டி, அவ்வூர் நாலாகோயிற்பற்று மணிகளெல்லாம் துக்கநாதத்துடன் அசைந்தாடின. மணிஒலி கேட்டதும் நாலாவிடங்களிலுள்ள சகல சாதிசமய மக்கள் எல்லோரும் கூட்டம் கூட்டமாகவும், சாரிசாரியாகவும் வந்து தங்கள் தங்கள் கடைசி மரியாதையைத் தெரிவித்தனர். கொழும்பு, திரிகோணமலை முதலாம் பலவிடங்களிலிருந்து அனுதாபத் தந்திகளும், மலர்வளையங்களும் ஏராளமாக வந்து குவிந்தன.

அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக அர்ச். அந்தோனியார் கோயிலில் ஓர் துக்கப்பாடற்பூசை கட்டளைக் குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ்சுவாமி அவர்களால் நிறைவேற்றப்பட்டது. பின், அன்று பிற்பகல் 5மணியளவில் பெருந்திரளான மக்கள் குழுமிநிற்க, நாலா கோயில் நாதமணிகள் துக்கம் ஒலிக்க, சறை பறை முழங்க, அதிர்வெடி வெடிக்க, வண. பி. ஜே. சிவரத்தினம் சுவாமி அவர்களும், வண. வி. ஆர் தார்சீசியஸ்சுவாமியவர்களும்தியாக்கோன் உபதியாக்கோனுக உதவிபுரிய, வண. எஸ். நல்லையாசுவாமியவர்களால் துக்க சங்கீதம்பாட, இருநிரையில் பாவர்களால் மலர்வளையங்கள்ஏந்த, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளால் பிரேதமானது பேழையுள்வைத்துத் தூக்கி நில பாவாடைமீது ஊர்வலமாகச்சென்று சேமக்காலை அடைந்து, கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரை இழந்து துன்புறும் மனைவி, மக்கள், இனசனருடன் நானும் அனுதாபப்படுகிறேன். இவரதுஆன்மா சாந்தியடைவதாக.

— காவலூர் கவிஞன்

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். லூர்துமாதாவின் அருளினல் எனதுகுழந்தையின்வருத்தம் நீங்கியது. அவவின்நாமம் என்றென்றும் மகிமைப்படுவதாக.

அ. ஞா.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 12-1959.